# செம்மணி

நிலம் 2 துகள் 93 வள்ளுவர் ஆண்டு 2052, 30 சித்திரை - 06 வைகாசி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-


## வரியையும் அதிகரிக்கப் போகிறது அரசு

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் வானத்தைத் தொட்டுள்ள நிலையில் அரசு வரிகளை அதிகரிக்கப் போகின்றது. அதைத் தவிர அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கு வேறு வழியில்லை என்று நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் நாளாந்த இறக்குமதிக்கான

பக்கம் 02

## அடுத்தடுத்து வரும் மாதங்களில் உணவுத் தட்டுப்பாடு தீவிரமாகும்

இலங்கையில் அடுத்துவரும் மாதங்களில் உணவுப் பற்றாக்குறை மேலும் தீவிரமடையும் என்று விவசாயத்துறை வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். கடந்த 10 ஆண்டகளில் இல்லாத அளவிற்கு மிக மோசமான பெரும்போக விளைச்சல் இந்த ஆண்டு கிடைத்திருப்பதன் காரணமமாக ஏற்கனவே உள்ள பற்றாக்குறை நிலைமை மேலும் மோசமடையும் என்றும் அவர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

அசேதன உர இறக்குமதியை முற்றாக நிறுத்தி சேதன விசாயமுறைக்குத் திரும்புவது என்று அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச எடுத்த முடிவு காரணமாக இம்முறை பெரும்போகச் செய்கையில் 50 சதவீத விளைச்சல் குறைந்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் முக்கியமான உணவாக இருப்பது அரிசி. நாட்டிலுள்ள 22 லட்சம் விவசாயிகளில் 80 சதவீதமானவர்கள் 8 லட்சம் ஏக்கர் விளை நிலத்தைப் பயன்படுத்தி அரிசியையே உற்பத்தி செய்து வருகின்றார்கள்.

பக்கம் 02

## 8ஆவது உயிரும் பறிபோனது

எரிபொருளுக்காக வரிசையில் நிற்கும்போது நிகழ்ந்த உயிரிழப்புக்களில் 8ஆவது வியாழக் கிழமை இடம்பெற்றுள்ளது. களுத்துறையில் இந்தச் சாவு இடம்பெற்றது.

களுத்துறை வடக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் நின்றி

பக்கம் 02



## நாட்டை நாசமாக்கிய ஆட்சியை விரட்டியடித்தே தீரவேண்டும்

### சஜித் சூளுரை

"வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாட்டை நாசமாக்கிய ராஜபக்ச ஆட்சியை நாம் வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்."

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்துக்குள் நடத்தப்படும் கட்சி தாவல்கள் முழுமையான சூதாட்டம். அந்தக் குப்பை மேட்டில் ஐக்கிய மக்கள் சக்தியோ, ஐக்கிய மக்கள் கூட்டணியோ விழப்போவதில்லை.

இன்று அமைச்சுப் பதவிகளும், தலைமை அமைச்சர் பதவியும் ஏல விற்பனைக்கும் சூதாட்டத்துக்கும் விடப்பட்டுள் ளது. இந்த நாற்காலி பரிமாற்றத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று, 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் பதவியை உருவாக்கிய இந்த ஆட்சி இன்று நாட்டை அதல பாதாளத்துக்குள் தள்ளியுள்ளது.

இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பலம் ஐக்கிய மக்கள் சக்திக்கே இருக்கின்றது" - என்றார்.

### இடைக்கால அரசு வேண்டாம்

## முதலில் கோட்டாபய வீட்டுக்கு போகட்டும்

### ராஜித அழுங்குப்பிடி



"நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண இடைக்கால அரசு தேவையில்லை. புதிய அரசே வேண்டும். அதற்கு முன் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்லவேண்டும்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

புதிய தலைமை

பக்கம் 02




## நாணய நிதியத்துடன் 2 மாதங்களுக்குள் உடன்படிக்கை

பன்னாட்டு நாணய நிதியத்துடன் இரண்டு மாதங்களுக்குள் உடன்படிக்கைக்கு வர முடியும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு நாணய நிதியத்தின் உதவியையே பெரிதும் எதிர்பார்த்து உள்ளது.

இதற்கான பெரும் பணவியல் கொள்கை கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னேற்றம் காணப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். அதன் பின்னரே இலங்கையில் வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தைத் தொடங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மத்திய வங்கியின் ஆளுநர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

## கோட்டா – மஹிந்த இடையே எந்த முரண்பாடும் இல்லை

### ஒருவரையொருவர் பதவி விலகவும் கோரவில்லை என்கின்றார் பஸில்

"அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஒருவரையொருவர் பதவி விலகக் கோரவுமில்லை."

இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநருமான நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

பக்கம் 02



# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


# குறைந்தபட்ச நேர்மையாவது அவசியம்!

நாடு ஏற்கனவே அந்நிச் செலாவணிப் பற்றாக் குறையால் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப் பட்டுள்ள நிலையில், நிலையற்ற ஆட்சி மற்றும் இந்த ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் வேலை நிறுத்தங்ககள் காரணமாக நிலமை மேலும் தீவிர மடைந்து வருகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு இன்றைய ராஜபக்ச ஆட்சியாளர்களே காரணம் என்று கூறி அவர்களைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி மக்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் வீதிக்கு இறங்கத் தொடங்கி ஒரு மாத காலம் ஆகும் நிலையிலும் அரச தலைவரோ இன்றைய ஆட்சியாளர்களோ பதவி விலகிச் செல்வதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவியிலி ருந்து விலகவேண்டும் என்பது மக்களின் முக்கிய மான கோரிக்கையாக இருக்கின்றது. ஆனால், தனது பதவியிலிருந்து விலக மறுக்கும் அவர் தனக்குப் பதிலாக ஆட்சியாளர்களை மாற்றி அனைத்துக் கட் சிகளையும் உள்ளடக்கிய புதிய அமைச்சரவை ஒன்றை உருவாக்குவதற்குக் கொள்கையளவில் இணக்கத்திற்கு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

ராஜபக்சக்களின் ஆட்சியதிகாரத்திலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் தனித்துச் சுயாதீனமாகச் செற் படப்போவதாக அறிவித்த 11 கட்சிகளின் பிரதி நிதிகளுடன் வெள்ளிக்கிழமை நடத்திய சந்திப் பின்போது அனைத்துக் கட்சி அமைச்சரவையை உள்ளடக்கிய இடைக்கால ஆட்சி ஒன்றை அமைப் பதற்கான முன்முயற்சிகளை எடுப்பதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தத் தகவலை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினார். இதன் மூலம் தான் பதவியிலிருந்து நீங்கப்போவ தில்லை என்பதை அரச தலைவர் மீண்டுமொருமுறை திட்டவட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார். ஏற்க னவே அவருக்கு எதிராகவும் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கும் நிலையில் அரச தலைவர் தொடர்ந்தும் பதவி விலக மறுப்பது வேலை நிறுத்தங்களையும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் மேலும் தீவிரப்படுத்தப் போகின்றது.

இந்த நிலமை நாட்டின் பொருளாதாரத்தை இன் னும் மோசமாகப் பாதிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். ஏற்கனவே அதள பாதாளத்திற்குள் வீழ்ந்திருக்கும் பொருளாதார நில மைகளை இது மேலும் மோசமாக்கி பொருளாதார ரீதியாக நாடு மூழ்கிப்போகும் நிலைக்குத் தள்ளிவிடும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

தொடரும் போராட்டங்களாலும் பதவி விலக மறுக்கும் அரசியல் தலைவர்களாலும் நாட்டின் அர சியல் நிலமைகள் தொடர்ந்தும் நிலையற்ற தன் மையில் ஊசலாடுவது பொருளாதார ரீதியாக நாட்டை மீட்டெடுப்பதற்கு எந்த வகையிலும் உதவப் போவ தில்லை. நாட்டை வளப்படுத்துவோம், மக்களுக்கு சுபீட்சத்தைக் காண்பிப்போம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகள் இப்படி மக்க ளைப் படுகுழிக்குள் தள்ளுவதற்குப் பதில் குறைந்த பட்ச நேர்மையுடனாவது பதவிகளில் இருந்து விலகி நாட்டை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளுக்கு வழி விடவேண்டும்.



## அடுத்தடுத்து...

இந்த முறை பெரும்போகம் ஏற்கனவே முடிந்து விட்டது. ஏற்கப்படமுடியாத பாதிப்பு நிகழ் ந்துவிட்டது. அடுத்த பெரும் போகத்திற்குத் தேவையான விதை நெல்லை இப்போதாவது பெறவில்லை என்றால் அடுத்த வருடப் பெரும்போகச் செய்கை கூட பாதிப்படை யலாம். பொருளாதார நெருக்கடி காரணமாக விதை நெல்லை இறக்குமதி செய்வதற்கான டொலரைப் பெறுவது என்பது சிக்கலானது. விதை நெல் இறக்குமதி செய்யப்படவில்லை என்றால் 2023 வரையும் இறக்குமதி அரி சியிலேயே நாடு தங்கியிருக்கவேண்டியி ருக்கும் என்று புதன்கிழமை கொழும்பில் தெரிவித்தார் பேராசிரியர் கே.கே.ஐ.யு. அனுரகுமார. றுகுணு பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இவர் விவசாயத்தைப் பாதுகாப்பதற்கான கல்விசார ஊழியர்கள் அமைப்பின் உறுப்பினருமாவார்.

உர இறக்குமதித் தடையால் ஏற்பட்ட பாதிப்பை இட்டு நிரப்ப சீனா 5 ஆயிரம் மெட்ரிக் தொண் அரிசியை அன்பளிப்புச் செய்வதாகத் தெரிவித்திருக்கும் நிலையில் இந்தியா, பாகிஸ்தான், மியான்மர் ஆகிய நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவேண்டியிருந்தது.

அரசின் தவறான கொள்கை காரணமாக அரிசி மட்டுமின்றி கால்நடைத் தீவனத்தின் முக்கிய கூறாக விளங்கிய சோளம் உற்பத்தி 70 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்கி றார்கள் வல்லுநர்கள். அதேபோன்று ஆண் டின் முதல் காலாண்டில் தேயிலையின் உற் பத்தி 52 மில்லியன் அமெரிக்க டொலர் என்ற அளவிற்கு வீழ்ச்சி கண்டுள்ளது. மரக்கறி உற்பத்தியும் 30 சதவீதத்தால் குறைந்துள்ளது.

விலைவாசி உயர்வு காரணமாக விசாயி கள் விவசாய நடவடிக்கைகளைக் கைவிடு வதும் உணவு உற்பத்தி வீழ்ச்சிக்கான முக்கி யமான காரணம் என்று வல்லுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சந்தையில் 50 கிலோ கிராம் உரம் 6 ஆயி ரம் ரூபாவுக்குக் கிடைத்த நிலையில் அதன் இன்றைய பெறுமதி 45 ஆயிரமாக உயர்ந் துள்ளது. இந்த நிலை விவசாயிகள் விவ சாய நடவடிக்கையில் ஈடுபடுவது சாத்தி யமற்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர். உரத்துக்கான அரச மானியமும் நிறுத்தப் பட்ட நிலையில் அசேதன உரப் பயன்பாடு நினைத்தும் பார்க்க முடியாததாகி இருப்ப தாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

## கோட்டா...

"நாட்டில் இன்று பெரும்பாலான ஊடகங்கள் எமது ஆட்சிக்கு எதிராகவே செய்திகளை வெளியிடுகின்றன. இதன் பின்னணியில் யார் செயற்படுகின்றார்கள் என்று தெரிய வில்லை.

ஊடகங்களில் வெளிவரும் செய்திகளில் கூறுகின்றபடி அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. அரச தலைவ ரைப் பதவி விலகுமாறு தலைமை அமைச் சரோ தலைமை அமைச்சரைப் பதவி விலக குமாறு அரச தலைவரோ கோரவில்லை. எனவே, ஊடகங்கள் உண்மைத்தன்மையுடன் செய்திகளை வெளியிட வேண்டும். நடு நிலையுடன் செயற்படவேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியை எவரும் கவிழ்க்க முடியாது. அதே வேளை, அரச தலைவரையும் பதவியி லிருந்து எவரும் விரட்டவும் முடியாது" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலில்...

அமைச்சர் தலைமையில் இடைக்கால ஆட் சியமைக்க உருவாக்க அரச தலைவர் கோட் டாபய ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார் என்று முன்னாள் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன வெள்ளிக்கிழமை தெரிவித் திருந்தார். அத்தகைய புதிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்னர் அரச தலைவர் பதவி விலகவேண்டும் என்றார் ராஜித.

இடைக்கால ஆட்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஆதரவு வழங்காது என் றும் ராஜித திட்டவட்டமாகத் தெரிவித்தார். இந்த விடயத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற் கனவே பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஆட்சியிலும் ஆட்சியா ளர்களிலும் அதிருப்தியடைந்து நாடாளு மன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப் படுத்துவதற்காகவும் தனது பதவியைத் தக்க வைப்பதற்காகவுமே இடைக்கால ஆட்சி அமைய அரச தலைவர் இணக்கம் தெரி வித்திருக்கலாம் என்றும் அவர் ஊகம் வெளியிட்டார்.

"அரச தலைவர் விரும்பும் புதிய தலைமை அமைச்சர் யார்? அண்ணனை (மஹிந்த ராஜபக்ச) பதவியிலிருந்து தான் விலகச் செல்ல வில்லை என்று தெரிவித்த கோட்டாபய, எப்படி புதிய தலைமை அமைச்சரை நிய மிக்கப் போகின்றார்?" என்றும் கேள்வி எழுப்பினார் ராஜித.

"நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண இடைக்கால ஆட்சி தேவை யில்லை. புதிய ஆட்சியே வேண்டும். அதற்கு முன் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக் குச் செல்லவேண்டும். அப்போதுதான் புதிய ஆட்சியாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியும்.

தற்போதைய அரசை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் தோற்கடித்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதிய அரசை நாம் நிறுவுவோம்" - என்றும் ராஜித மேலும் தெரிவித்தார்.

## வரியையும்..

பணத்தைப் பெறுவ தற்கு வரியை உயர்த்து வதைத் தவிர வேறு மார்க்கம் ஏதுமில்லை என்று அவர் விளக்கினார். 2019ஆம் ஆண்டு பெறுமதி சேர் வரியைக் குறைத் தமை இந்த ஆட்சி செய்த மிகப் பெரும் தவறு என்றும் நிதி அமைச் சர் தெரிவித்தார்.

பிபிஸி உலக சேவைக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இவற்றைத் தெரிவித் திருக்கிறார். அத்தியாவசியப் பொருள்க ளின் நாளாந்த இறக்குமதிக்காக மட்டும் அடுத்த 8 மாதங்களுக்குள் 4 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பெறுமதி சேர் வரி 8 சதவீதம் என்பது பெரும்பாலான பொருட்களுக்கு இறக்கு மதியிலேயே தங்கியிருக்கும் இலங்கை போன்ற நாடுகளுக்குப் போதாது, அதனை 13 முதல் 14 சதவீதமாக அதிகரிக்க வேண் டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## 8ஆவது...

ருந்த நபர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரி ழந்தார். மதியம் கடும் வெப்பம் சூழ்ந்திருந்த நேரத்தில் இந்தத் துயரம் நிகழ்ந்ததாகக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு கீனடியங்கல பகுதி யைச் சேர்ந்த 63 வயதான மொகமட் சாதிக் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நாட் டில் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து எரிபொருள் மற் றும் சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் அவற்றைப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் நீண்ட நேரம் காத்தி ருக்கவேண்டியிருக்கிறது.

அப்படி வரிசையில் நின்ற சமயம் ஏற்க னவே 7 பேர் உயிரிழந்திருக்கின்றனர். களுத் துறைச் சம்பவம் அந்த வரிசையில் 8 ஆவது என்று காவல்துறையினர் தெரிவிக் கின்றனர்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**23734 | வே | 1986**
கோப்பாய் | இந்து | HND
Technical Officer
அஸ்வினி (மேடம்)
178 செ.மீ

**22729 | வே | 1986**
தெல்லிப்பளை | இந்து
Diploma | Cashier
திருவாதிரை (மிதுனம்)
175 செ.மீ | லண்டன் | செவ்:07

**22990 | வே | 1987**
யாழ் நகர் | இந்து | A/L
Storekeeper | அவுஸ்ரேலியா
அனுஷம் (விருச்சிகம்)
171 செ.மீ

**22687 | வே | 1987**
வட்டுக்கோட்டை | இந்து
B.Tech | Engineer
பூரம் (சிம்மம்)
183 செ.மீ | சூ.செவ்: 12

**22834 | வே | 1988**
அச்சுவேலி | இந்து
BSC, MSC | Teacher
பூரட்டாதி (கும்பம்)
154 செ.மீ | சைவம்

**22837 | வே | 1989**
பன்னாகம் | இந்து | BA
Development Officer
மகம் (சிம்மம்)
185 செ.மீ

**22726 | வே | 1989**
இளவாலை | இந்து | BSC
Civil Engineer | Divorced
அனுஷம் (விருச்சிகம்)
182 செ.மீ | செவ் : 02

**22852 | வே | 1989**
மானிப்பாய் | இந்து
BSC | Bank Assistant
பூராடம் (தனுசு)
174 செ.மீ

**22825 | வே | 1990**
குப்பிளான் | இந்து | BA
Development Officer
அஸ்வினி (மேடம்)
175 செ.மீ | செவ் : 04

**22975 | ந | 1990**
பருத்தித்துறை | இந்து | NCT
Quality Control Officer
ஆய்யிலியம் (கடகம்)
160 செ.மீ | செவ் : 08

**23719 | வே | 1991**
மானிப்பாய் | BSC, B.Tech
Technical Officer
ரோகிணி (ரிஷபம்)
176 செ.மீ | இந்து

**23797 | கோ | 1991**
புத்தூர் | இந்து | BSC
Business | லண்டன்
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | சூ.செவ் : 04

**23743 | வே | 1991**
நயினா தீவு | BA,PGDT, PGDE
Graduate Teacher | இந்து
பூராடம் (தனுசு)
172 செ.மீ | சூ.செவ் : 05

**22747 | வே | 1991**
சாவகச்சேரி | இந்து
BSC | Engineer
அவிட்டம் (மகரம்)
182 செ.மீ | சூ.செவ் : 07

**22954 | வே | 1991**
திருநெல்வேலி | இந்து | BBA
Managing Director
கார்த்திகை (ரிஷபம்)
175 செ.மீ

**22900 | வே | 1992**
யாழ் நகர் | இந்து | BSC,MA,
PHD | Scientist | அமெரிக்கா
பூரட்டாதி (மீனம்)
168 செ.மீ | செவ் : 02

**23761 | சு | 1992**
சித்தங்கேணி | இந்து
MBA | Banker
மூலம் (தனுசு)
166 செ.மீ | செவ் : 08

**22966 | வே | 1992**
சாவகச்சேரி | இந்து | BEE
Electrical Engineer
திருவாதிரை (மிதுனம்)
186 செ.மீ | செவ் : 08

**22894 | வே | 1993**
கோண்டாவில் | இந்து | BSC
Software Engineer
மிருகசீரிடம் (மிதுனம்)
183 செ.மீ | செவ் : 02

**22693 | வே | 1993**
வட்டுக்கோட்டை | இந்து | O/L
Hotel Staff | சுவிட்சர்லாந்து
பூராடம் (தனுசு)
152 செ.மீ

**22972 | வே | 1993**
வண்ணார்பண்ணை | இந்து
BSC, MBA | Engineer
புனர்பூசம் (கடகம்)
165 செ.மீ

**22921 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSC
Civil Engineer
திருவோணம் (மகரம்)
172 செ.மீ

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BSC
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**22888 | வே | 1995**
கொழும்பு | இந்து
BSC | IT Engineer
திருவாதிரை (மிதுனம்)
183 செ.மீ | செவ் : 01

**22993 | வே | 1995**
கொக்குவில் | இந்து
BSC | Engineer
கார்த்திகை (ரிஷபம்)
177 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22768 | வே | 1982**
நயினா தீவு | இந்து
MD | Doctor
ரேவதி (மீனம்)
155 செ.மீ

**23755 | வே | 1983**
வண்ணார்பண்ணை | B.Com
Development Officer
சித்திரை (துலாம்)
160 செ.மீ | இந்து

**22681 | வே | 1989**
காரைநகர் | இந்து
BSC | Lecturer
ரேவதி (மீனம்)
154 செ.மீ

**23794 | கோ | 1989**
வரணி | இந்து | BA
Development Officer
புனர்பூசம் (மிதுனம்)
172 செ.மீ

**22765 | வே+அ | 1989**
வண்ணார்பண்ணை | இந்து
BABM | Manager
பூரட்டாதி (மீனம்)
153 செ.மீ | சூ.செவ் : 01

**22795 | வே | 1990**
மண்கும்பான் | இந்து | BA
Development Officer
மூலம் (தனுசு)
172 செ.மீ

**22876 | வே | 1990**
வண்ணார்பண்ணை | இந்து
BSC | Senior Suprental
அஸ்வினி (மேடம்)
162 செ.மீ

**22951 | வே | 1990**
கரணவாய் | இந்து
LLB | Lawyer
மூலம் (தனுசு) | சைவம்
160 செ.மீ

**23791 | வே | 1991**
புன்னாலைக்கட்டுவன் | இந்து
BBM | KYC Analyst | Divorced
ரேவதி (மீனம்) | நெதர்லாந்து
163 செ.மீ | சூ.செவ் : 12

**22960 | கோ | 1991**
மானிப்பாய் | இந்து | Diploma
in Teaching | Teacher
விசாகம் (துலாம்)
152 செ.மீ | சூ.செவ் : 07

**23728 | சு | 1992**
வல்வெட்டித்துறை | MBBS
Final Year Medical Student
ரேவதி (மீனம்) | இந்து
176 செ.மீ | செவ்: 02

**23716 | வி | 1993**
தெல்லிப்பளை | இந்து | BSC,
Reading MSC | Executive
Manager | உத்தரம் (கன்னி)
160 செ.மீ | செவ் : 01

**22948 | வே + சு | 1993**
சாவகச்சேரி | இந்து | BSC
Software Engineer
சதயம் (கும்பம்)
158 செ.மீ

**22936 | வே | 1993**
அளவெட்டி | இந்து
BBM | Teacher
மகம் (சிம்மம்)
151 செ.மீ | செவ் : 07

**22792 | வே | 1993**
அச்சுவேலி | இந்து
BSC | Demonstrator
கேட்டை (விருச்சிகம்)
160 செ.மீ | செவ் : 02

**22891 | வே | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
HND | Bank Assistant
மூலம் (தனுசு)
159 செ.மீ

**22780 | வே | 1993**
திருநெல்வேலி | இந்து
LLB | Studying
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ் : 02

**22774 | வே | 1993**
திருநெல்வேலி | இந்து
LLB | Studying
பூரம் (சிம்மம்)
168 செ.மீ | சைவம்

**23746 | ந | 1994**
கோப்பாய் | கிறிஸ்தவம்
Diploma | Teacher
ரேவதி (மீனம்)
152 செ.மீ | சூ.செவ் : 01

**23707 | மு | 1994**
மட்டக்களப்பு | இந்து
B.Eng | Engineer
கேட்டை (விருச்சிகம்)
168 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

**18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்**

# மகிந்தவின் சவப்பெட்டி: எப்படி மனம் வந்தது?

ரவீந்திரன்

மகிந்த ராஜபக்சவைச் சாதாரண சிங்கள மகன்கூட "மகிந்த மாத்தையா" என்றே விழிப்பதுண்டு. போரை முடிவுக்குக் கொண்டு வந்து சிங்களவர்களின் நிம்மதியான வாழ்வுக்கு வித்திட்டவர் அவரே என்று கருதப்படுகின்றார். டி.எஸ். சேனநாயக்காவுக்குப் பின்னர் மீசை வைத்த அரச தலைவர். கம்பீரமான அல்லது மிடுக்கான தமது தலைவரைச் சிங்கள மக்கள் மிகவும் விரும்பினார்கள். கனம் பண்ணினார்கள்.


தற்போது அதே மகிந்தவை அவர் உயிருடன் இருக்கும் போதே சவப் பெட்டியில் தூக்கிச் செல்கிறார்கள். மகிந்தவின் ஒளிப்படத்தை ஒட்டி சவப் பெட்டியை எடுத்துச் செல்வதும், தீ வைப்பதும் மிகச் சாதாரணமாக நடக்கின்றன. ஒரு கம்பீரமான தலைவர் காட்போட் தலைவராக அல்லது வெருளிப் பொம்மையாகச் சிங்கள மக்கள் முன் மாற்றப்பட்டுவிட்டார். காலி முகத்திடல் போராட்டத்தை நடத்துபவர்கள் குப்பைப் பைகளில் மகிந்தவின் சிவப்புத் துண்டைக் கொழுவி வைத்திருக்கிறார்கள். அந்தளவிற்கு அவரைத் தூக்கிக் குப்பைக் கூடைக்குள் கடாசிவிட்டார்கள்.



போரை முடிவுக்குக் கொண்டுவந்த ஒரு காரணத்துக்காக மகிந்த தரப்பின் எல்லா விடயங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே தற்போது வீதியில் இறங்கியுள்ளவர்களின் மன நிலையாகும். குற்றவாளிகளை விடுதலை செய்தமை, கொலையாளிகளை விடுவித்தமை போன்ற விடயங்கள் சிங்கள மக்களை அதிகம் பாதித்தன.

### மக்களுக்கு ஏன் வெறுப்பு வந்தது

'உயர்ந்த இடத்தில் இருக்கும்போது உலகம் உன்னை மதிக்கும் நிலமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும்கூட மிதிக்கும்' என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளில் கூறப்பட்ட விடயமே மகிந்த ராஜபக்சவுக்கு நடந்துகொண்டி ருக்கிறது.




தமிழ் மக்களின் விரோதியான மகிந்தவுக்குப் பெரும் அரணாக இருந்த சிங்கள மக்கள் தற்போது மகிந்தவின் வீட்டு அரண்களைச் சுற்றி வளைத்திருக்கிறார்கள். 30 வருடகாலமாகப் போர் நடந்தபோது சிங்கள மக்களின் முழுமையான சிந்தனை போர் பற்றியதாக இருந்தது. அதனால் வேறு விடயங்களைக் கையிலெடுக்க வாய்ப்பிருக்கவில்லை. போர் முடிந்து 12 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் மகிந்த குடும்பத்தின் செயற்பாடுகளில் பல மனித உரிமை மீறல்களும், மக்கள் விரோத செயல்களும் சிங்கள மக்களைப் பாதித்திருக்கின்றன.

போரை முடிவுக்குக் கொண்டுவந்த ஒரு காரணத்துக்காக மகிந்த தரப்பின் எல்லா விடயங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே தற்போது வீதியில் இறங்கியுள்ளவர்களின் மன நிலையாகும். குற்றவாளிகளை விடுதலை செய்தமை, கொலையாளிகளை விடுவித்தமை போன்ற விடயங்கள் சிங்கள மக்களை அதிகம் பாதித்தன. முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மீது போடப்பட்டிருந்த திவிநெகும ஊழல் மற்றும் பல வழக்குகள் நீதிமன்றில் திரும்பப்பெறப் பட்டன. இதுவும் சிங்கள மக்களை விழிப்படையச் செய்தது.

### சீன - இந்திய நிலைப்பாடுகள்

ராஜபக்சாக்களின் வெளி நாட்டுக் கொள்கைகள், கடன் பெறும் நடவடிக்கைகள் எனப் பல செயற்பாடுகள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இலங்கையை விற்கப் போகிறார்கள் என்ற பயத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. 1970-77 சிறீமாவோவின் ஆட்சியிலிருந்து மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்ததாக 1977இன் பின் திறந்த பொருளாதாரக் கொள்கை ஒன்று முன்வைக்கப்பட்டுச் சிங்கள மக்களை மகிழ்வித்தார் ஜெ.ஆர். அத்தகைய ஒரு வளமான சூழலைச் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் நாட்டைக்கூறு போட்டு விற்றிருந்தாலும் ஏன் என்று கேட்டிருக்க மாட்டார்கள். ஆனால் ராஜபக்சக்கள் தங்கள் கொள்கை மூலம் தங்கள் குடும்பத்தை மட்டுமே வழப்படுத்திக்கொண்டார்கள் என்று சிங்கள் மக்கள் இப்போது நினைக்கிறார்கள்.

மகிந்த ஆட்சியில் மக்களை முதலில் பாதித்தது மானியப் பசளை நிறுத்தப்பட்ட விடயமாகும். அடுத்து யூறியா இறக்குமதியை முற்றாக நிறுத்தியது. நெல், மரக்கறி உற்பத்திகளை நம்பியிருந்த பெரும்பாலான சிங்கள விவசாயிகள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டனர். மின்சாரமின்மை சாதாரண கிராமப்புற மக்களைவிட நகரவாசிகளையும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இலகுவாக அதிக பணம் உழைத்த செல்வந்தர்களையும் பெரிதும் பாதித்தது. எல்லாவற்றுக்கும் இறுதியில் நல்ல தீர்வு ஒன்றை மகிந்த ராஜபக்ச முன்வைப்பார் என நம்பியிருந்த சிங்கள மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. விடுதலைப் புலிகளை அழித்த காரணத்தை வைத்தும் இனத்துவேசத்தை வைத்தும் சிங்கள



**வேகம் விபத்தையும், விபரீதத்தையும் ஏற்படுத்தும் என்பது பொது. ஆணோ பெண்ணோ யார் வேகமாக ஓடினாலும் அது ஆபத்தானது தான். இதையெல்லாம் விடுத்து அறிவியல் ரீதியாக இதனை அணுகும்போதும் வேகமெடுக்கின்ற வகையில் பெருகிக் கிடக்கின்ற இந்த ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிள்கள் அதிக எரிபொருளை உள்ளெடுப்பது உறுதியாகியிருக்கிறது**

# குதியுந்துகளால் அதிக செலவு...?

**சிந்தாமணி**

ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளைக் குதியுந்து என்று தமிழ்ப் படுத்துகிறார்கள். "ஸ்கூட்டியில பெட்டை போற போக்கைப் பார்...? சீறிக்கொண்டு போறாள்...! பறந்துகொண்டு போறாள்..." என்றெல்லாம் நம்மவர்கள் நக்கலாகக் கதைப்பார்கள். ஆண்கள் வேகமெடுப்பதைச் சாதாரணமாகவும் பெண்கள் வேகமெடுப்பதை விநோதமாகவும் பார்க்கும் பார்வைக் குறைபாடு நம்மவர்களில் பலருக்கு இருக்கிறது.

அண்மையில் பாடசாலை நிகழ்வென்றில் பேசிய கல்வி அதிகாரி ஒருவரே இதனைக் குறிப்பிட்டார். திருமணம் முடித்த ஆண்களைவிட திருமணம் முடித்த பெண்கள் தங்கள் குழந்தைகளையும் பின்னால் இருத்திக்கொண்டு அதிவேகமாக ஓடுகிறார்கள் என்று அவர் விசனப்பட்டார். ஆண்களில் திருமணம் முடிக்காதவர்கள்தான் உந்துருளிகளில் அதிவேகமாகச் செல்கிறார்கள் என்றும் திருமணம் முடித்த ஆண்கள் தங்கள் குடும்பங்களின் பொறுப்புணர்ந்து வேகமாக ஓடுவதில்லை என்றும் ஆனால் பெண்களோ திருமணம் முடித்த பின்னர் பின்னாள் இருக்கும் பிள்ளைகளின் நிலை பற்றிக்கூடக் கவலைப்படாமல் வேகமாக ஓடுகிறார்கள் என்றார் அவர்.

வேகம் விபத்தையும், விபரீதத்தையும் ஏற்படுத்தும் என்பது பொது. ஆணோ பெண்ணோ யார் வேகமாக ஓடினாலும் அது ஆபத்தானது தான். இதையெல்லாம் விடுத்து அறிவியல் ரீதியாக இதனை அணுகும்போதும் வேகமெடுக்கின்ற வகையில் பெருகிக் கிடக்கின்ற இந்த ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிள்கள் அதிக எரிபொருளை உள்ளெடுப்பது உறுதியாகியிருக்கிறது. நாட்டு நிலமை பரிதாப நிலையை அடைந்து கொண்டிருக்கையில் இறக்குமதிப் பொருள்களின் விலைகள் அதிகரித்து அதிலும் முக்கியமாகப் பெற்றோல் விலை எகிறிவிட்டிருக்கின்ற சூழலில் பெற்றோலை அதிகளவில் உள்வாங்கி அதிக செலவை ஏற்படுத்தும் பழக்கம் இந்தக் குதியுந்துகளுக்குண்டு என்கிற விசயத்தை விவாதிக்கவேண்டியே இருக்கிறது.

பெற்றோல் சிக்கனம் இனிக்கட்டாயம் என்று கடந்த வாரங்களில் சொல்லி பெற்றோலைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது எப்படி என்றும் சொல்லியிருந்த நிலையில் இந்தத் தகவலும் உங்களுக்குப் பயன் தரலாம்.

**ஆண் - பெண் மோட்டார் சைக்கிள்கள்...?**

ஆண்கள் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிளிலும் பெண்கள் பயன்படுத்தும் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளிலும் ஒரே இயந்திர வலுவுள்ள மோட்டார் சைக்கிள்கள் ஒவ்வொன்றை எடுத்துநோக்கினால் அதில் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிள் அதிக பெற்றோலை நுகர்வது உண்மை என்பது தெரியவரும். ஆண்களின் மோட்டார் சைக்கிள், பெண்களின் மோட்டார் சைக்கிள் என்று சொல்வதைவிடவும் கியர் அமைப்புள்ள மோட்டார் சைக்கிள்கள் அவ்வாறு இல்லாத ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிள்கள் என்று சொல்வதே பொருத்தமானது.

நம்மவர்கள் மத்தியில்தான் இது ஆண்கள் செலுத்தும் மோட்டார் சைக்கிள், இது பெண்கள் செலுத்தும் மோட்டார் சைக்கிள் என்கிற வகை பேதம் இருக்கிறது. ஆனால் நிறுவனங்கள் அவ்வாறு தயாரிப்பதில்லை. தேவைக்கும் விருப்புக்கும் ஏற்றவாறு அவரவர் தமது மோட்டார் சைக்கிள்களைத் தெரிவுசெய்து கொள்ளமுடியும். கியர் அமைப்புள்ள மோட்டார் சைக்கிள்களைப் பெண்கள் செலுத்தக்கூடாது - செலுத்தமுடியாது என்றுகூட எவ்வித நியதியும் இல்லை.

இவை ஒருபுறமிருக்க இந்த ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிள்கள் அதிக பெற்றோலை உள்ளீர்ப்பது எப்படி என்ற தொழில்நுட்ப ரீதியான விடயம் குறித்துப் பார்ப்பதே முக்கியமானது.

**அதிக எரிபொருளை நுகர்வது உண்மையா...?**

கியர் அமைப்புள்ள மோட்டார் சைக்கிள்களைவிட ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிள்கள் அதிக எரிபொருளை உள்ளீர்க்கவே செய்கின்றன. அதற்குக் காரணம், வேகத்துக்கு ஏற்றால்போல கியரை மாற்றி மாற்றிச் செலுத்துவதால் கியர் அமைப்புள்ள வண்டியின் ஆர்.பி.எம். எனப்படுகின்ற அமைப்பின் செயற்திறன் கையாளப்படுகிறது (இயந்திரத்துக்குள் உள்ள கிறாங் என்கிற கருவியைச் சுற்ற வைப்பதைக் குறிப்பதே இந்த ஆர்.பி.எம்.). இதனால் வேகத்துக்கு ஏற்றால்போல கியரை மாற்றி அமைக்கையில் அது உள்ளெடுக்கும் எரிபொருளைச் சரியான அளவில் வழங்க முடிகிறது. ஆர்.பி.எம். வலு அதிகமாக இருந்தால் அதைச் சுற்ற வைப்பதற்கு அதிக வலு தேவைப்படும். இதனால் அதிகமான எரிபொருளும் தேவைப்படுகிறது.

ஸ்கூட்டி ரக வாகனங்களில் இந்தக் கியர் அமைப்பு இல்லாமல் ஆர்.பி.எம். இன் வேகம் ஒரே அளவிலேயே தொழிற்பட்டுக்கொண்டிருப்பதால் அதன் தொழிற்பாட்டால் அதிக பெற்றோல் செலவாகிறது. இதைவிட ஸ்கூட்டிகள் சிறிய சக்கரங்களைக் கொண்டிருப்பதால் குறிப்பிட்ட தூரத்துக்குச் செல்லவேண்டுமாயின் அவற்றைச் சுற்ற வைப்பதற்குப் பெரிய சக்கரங்களைவிடவும் அதிக வலு தேவைப்படுவதால் அதிக பெற்றோல் தேவைப்படுகிறது என்றும் சொல்கிறார்கள்....!

**மகிந்தவின் ...**



மக்கள் மத்தியில் அரசியல் செய்ய முடியாத நிலையில் மகிந்த தேவையற்றவராகியிருக்கிறார்.

பொருளாதாரச் சீரின்மையால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்தும் மீள முடியாது மேலும் மேலும் ஒடுக்கப்பட்டு வருகின்ற மக்கள் ஆட்சி மாற்றம் ஏதாவது நடந்தால் தாம் தப்பிப் பிழைக்க முடியும் என எதிர்பார்க்கின்றனர். அவர்களிடம் "நான் ஒருபோதும் பதவி விலகப் போவதில்லை" என்று திட்ட வட்டமாக மகிந்த ராஜபக்ச கூறியதும், இதுவரை உயர்ந்த இடத்தில் வைத்து வணங்கப்பட்ட மகிந்த ராஜபக்ச சிங்களவர்களுக்குப் பெரும் சர்வாதிகாரியாகினார். அதனால்தான் அவருக்கான சவப்பெட்டியைத் தெருவில் போட்டு எரிக்கும் துணிவு வந்தது. தமது தலைவர் தம்மை ஒருபோதும் கைவிட மாட்டார் என்று நம்பிய மக்களுக்கு தாம் கைவிடப்பட்டுவிட்டோம் என்ற நிலை ஏற்பட்ட பின்னர் தலைவர் உயிருடன் இருந்தாலும் மக்களைப் பொறுத்தவரை பிணமே. இதனால்தான் மகிந்தவின் சவப் பெட்டியை எடுத்துச் செல்ல மனம் வந்தது.

# அச்சடிக்காத பொருள்களுக்கு அதிக விலை




சுமந்திரன் - கோண்டாவில்

சமயம் பார்த்துக் கொள்ளையடிக்கும் வியாபாரிகளுக்கு நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையால் நல்ல சம்பாத்தியம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. நாடு தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்க அதில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள் பல வர்த்தகர்கள். பண ஆசையில் பணத்தை அதிகம் அறவிடத்தொடங்கியிருக்கிறார்கள். அந்தப் பணத்துக்கு மதிப்பில்லாமல் நாளாந்தம் அதன் பெறுமதி குறைந்து வருவது தெரியாமல் வங்கியில் வைப்புச் செய்து பெறுமதியைக் கணக்கிட்டுத் திருப்தியடைந்துகொண்டிருக்கிறார்கள்.

பண வீக்கத்தாலும் அதனாலுண்டான அசாதாரண நிலையாலும் பல்வேறு பொருள்களினதும் விலைகள் எகிறிவிட்டிருக்கின்றன. இது போதாதென்று வியாபாரிகளும் பொருள்கள் பலவற்றுக்கு விலையை ஏற்றி விற்பனை செய்கிறார்கள். குறிப்பாக விலைகள் அச்சிடப்படாத பொருள்களே இந்தச் சுத்துமாத்து விலையேற்றத்துக்குள் சிக்கியிருக்கின்றன.

நிறுவனத் தயாரிப்புகள் பலவும் சீலிடப்பட்ட பெட்டி, போத்தல், பொதி எனச் சந்தைக்கு வரும் போது அதிகூடிய சில்லறை விலை மற்றும் உற்பத்தி, கலாவதித் திகதி ஆகிய குறிப்புகளோடு வருகின்றன. இவற்றை வாங்கி வைத்து விற்கும் வர்த்தகர்களுக்கு அந்த நிறுவனத்தின் சார்பில் இலாபம் வழங்கப்படுகிறது. இதனால் அவற்றில் அச்சடித்த விலையிலேயே அவற்றை விற்பனை செய்யவேண்டிய கட்டாயம் வியாபாரிகளுக்கு இருக்கிறது. ஆனால் அதில்கூடச் சுத்துமாத்து நிகழ்த்துகிறார்கள் வர்த்தகர்கள்.

அங்கர் பால்மா விலையேறி விலை மாற்றம் கண்ட பின்னர் பழைய விலையில் அவற்றை வைத்திருந்த வர்த்தகர்கள் அவற்றின் பெட்டியை அகற்றிவிட்டு உள்ளேயுள்ள பக்கெற்றைப் புதிய விலைக்கு வழங்கிய வியாபாரிகள் பலர்.

சவர்க்காரம், தீப்பெட்டி, சலவைப் பவுடர்கள், சீமெந்து இன்னும் பல நிறுவனப் பொருள்கள் விலை அதிகரிப்புக்குள்ளாகிப் புதிய விலைகளுடன் சந்தைக்கு வரவுள்ள நிலையில் கையிருப்பிலுள்ள பொருள்களைப் பதுக்கி அங்கரைப்போல அவற்றையும் புதிய விலைக்கு விற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. விலை பொறித்த பொருள்களுக்கே இந்த நிலையென்றால் விலை பொறிக்காத இயந்திர ஒயில், வாகன உதிரிப்பாகங்கள், பண்டங்கள் - பாத்திரங்கள், சில்லைறைப் பொருள்களில் இந்த வர்த்தகர்கள் அடைகின்ற லாபத்தைச் சொல்லவாவேண்டும். இவற்றில் அடிமட்ட மனிதர்கள் பாதிக்கப் படுவதுதான் மிகத் துயரம்.




# சோளப் பணியாரம். ..!

இந்த வார சமையல்

ஆலயத் திருவிழாக்களுக்குச் சென்று திரும்புகையில் கச்சான் வாங்கும்போது கூடவே சோளனையும் வாங்கி வந்து உண்ட நிலை பின்னாள்களில் மாறித் திரையரங்குகளில் படம் பார்த்த வண்ணம் சோளனை நொறுக்குத்தீனியாகக் கொறிக்கும் நிலை உருவாகியது. அதை விடச் சோளமாவைப் பயன்படுத்திப் பலவித உணவுகளை ஆக்குகிறார்கள். ஆபிரிக்காவின் தேசிய உணவான சோளத்தை ஆசிய மக்கள் நொறுக்குத்தீனியாகத்தான் பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். அத்தகைய சோளனில் பலகாரம் ஒன்றை ஆக்குவது பற்றி இந்த வாரம் பார்ப்போம்.



**தேவையான பொருள்கள்**

சோளம் முத்துக்கள் - 1 கப், இட்லி செய்வதற்குப் பயன்படுத்தும் அரிசி - கால் கப், உளுந்து - 3 கரண்டி, உழுத்தம் பருப்பு - 1 கரண்டி, கடலைப் பருப்பு - 1 கரண்டி, பெரிய வெங்காயம் - 1, பச்சை மிளகாய் - 3, கறிவேப்பிலை, கொத்தமல்லி, உப்பு - சிறிதளவு.

**எப்படிச் செய்வது?**

சோளப் பணியாரத்தைச் செய்வதாயின் அதற்குத் தேவையான சோளனையும், உழுந்து, இட்லி அரிசி ஆகியவற்றையும் சுத்தம்செய்து நீரில் ஊற வைக்கவேண்டும் (2மணிநேரம்). ஊறியதும் உப்புச் சேர்த்துச் சொர சொரப்பாக அரைத்தெடுக்கவேண்டும். அரைத்தெடுத்த கலவையை 3 மணிநேரம் வரை புளிக்க வைக்கவேண்டும்.

சட்டி ஒன்றில் சிறிதளவு எண்ணெய் விட்டுச் சூடாக்கி அதில் உழுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றை இட்டு வதக்கவேண்டும். அத்தோடு வெங்காயம், பச்சை மிளகாய்களையும் நறுக்கிச் சேர்க்கவேண்டும்.

வதக்கியவற்றைக் கலவையுடன் கலந்து குழிவான தோசைக் கல்லில் ஊற்றிச் சுட்டெடுத்தால் ருசியான சோளப் பணியாரம் தயார்.






எஸ்.அப்துல் மஜீத்

# உக்ரைன் போரில் பெருமிதங்களின் அழிவு

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரில் உக்ரைன் பெரும் அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது. அங்கு நகரங்கள் அழிக்கப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் பேரிடருக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எல்லாப் போர்களிலும் எதிர்த் தரப்பின் சில முக்கியமான இலக்குகளைக் குறிவைப்பதுபோலவே இந்தப் போரிலும் சில இலக்குகள் குறிவைத்துத் தகர்க்கப்பட்டிருக்கின்றன. அப்படி இரு நாடுகளும் தங்கள் பெருமிதங்களாகக் கருதிவந்த இரு வாகனங்களின் அழிவு இரு நாடுகளிலும் பெரும் பேச்சை உருவாக்கியிருக்கிறது. மாஸ்க்வா - மிரியா எனும் அந்த இரு வாகனங்களின் கதையை இங்கே பார்ப்போம்!

**கருங்கடல் மோஸ்க்வா**

ரஷ்யாவின் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்று ‘மோஸ்க்வா’ (Moskva). மிகப் பெரிய போர்க் கப்பல் இது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் மாசி மாதம 24ஆம் நாள் தொடங்கியது. அப்போது உக்ரைன் மீதான கடல் வழித் தாக்குதலை மோஸ்க்வாதான் முன்னின்று நடத்தியது. இந்நிலையில் மோஸ்க்வா கப்பல் சித்திரை 14ஆம் நாளன்று கருங்கடலில் மூழ்கியது. "தீ விபத்து ஏற்பட்டதால், கப்பல் மூழ்கியது" என ரஷ்யா தெரிவித்தது. "நாங்கள்தான் ரஷ்யாவின் போர்க் கப்பலை அழித்தோம்" என அறிவித்தது உக்ரைன். அதுவும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஏவுகணையைக் கொண்டு கப்பலை அழித்ததாகவும் கூறியது.

பெரும் படை பலம் கொண்ட ரஷ்யாவின் பெருமைக்குரிய ஒரு போர்க் கப்பல், படை பலம் அற்ற, பெரும் அழிவுக்குள்ளான உக்ரைனால் தகர்க்கப்பட்டது என்கிற செய்தி உடனே பன்னாடுகளின் கவனம் பெற்றது. ரஷ்யா இந்த நிகழ்வைத் தனக்கு நேர்ந்த பெரும் அவமானமாகக் கருதியது. ரஷ்ய ஊடகம் ஒன்று "மோஸ்க்வா மூழ்கியதன் மூலம் மூன்றாம் உல கப் போர் தொடங்கிவிட்டது" என அறிவித்தது என்றால், ரஷ்யர்கள் மோஸ்க்வாவை என்னவாகப் பார்க்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

ரஷ்யா எவ்வளவு பலம் கொண்டு உக்ரைனைத் தாக்கியபோதிலும், மோஸ்க்வாவின் இழப்பு உளவியல் ரீதியாக ரஷ்யாவைத் தடுமாறச்செய்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ரஷ்யா சந்திக்கும் பெரும் இழப்பாக மோஸ்க்வா அழிப்பு பார்க்கப்படுகிறது. சமீபத்திய போரில் ரஷ்யா இழக்கும் இரண்டாவது போர் கப்பல் இது. முதல் போர்க் கப்பலான ‘சாரடோவ்’ பங்குனியில் உக்ரைனால் தாக்கப்பட்டது.

**மோஸ்க்வாவின் தனிச் சிறப்பு**

இன்று உக்ரைனால் வீழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் இந்தக் கப்பல், 1970களின் மத்தியில்,



# ஏதாலும் புதிசாயிருக்கோ?

**கதிரேசன் காத்தவராயன்**

வாசிசாலைப் பக்கம் கனகாலமாப் போகேல்லை எண்ட நினைப்பு வர வெளிக்கிட்டுப் போனன். அங்கை ஒருத ரும் இல்லை. அதிசய மாக் கிடக்குது எண்டு நினைச்சபடி பேப்பரு களைப் பாத்தன். முழுதும் போராட்டக் கதையள்தான்... விலைவாசிக் கதையளுக்கும் பஞ்சமில்லைத்தான். என்ன ஏதெண்டிற விளக்கமில்லா மலுக்கு அவனிவன் சொன்னதுகள்தான் அதிகம்... அதுகும் பஞ்சந்தானே? எண்டு நினைக்க என்னையறியாமலுக்குப் பெருமூச்சு வந்திட்டுது.

"என்னப்பா கதிரேசண்ணை பெருமூச்சு?" எண்டுகொண்டு முருகே சர் வந்து இருந்துகொண்டார். "இந்தச் செய்தியளிலையுமல்லே பஞ் சம் தெரியுது..." எண்டு சொல்லி முடிக்கயில்லை "பேப்பருகளுக்கும் தட்டுப்பாடுதானாமே?" எண்டுகொண்டு தம்பர் வந்தார். "எட தம்பு பேப்பர்த் தட்டுப்பாடு வேறை, செய்தித் தட்டுப்பாடுவேறை" எண்டு நிப்பாட்டினார் முருகேசர்.

"அது சரியப்பா நீங்கள் உந்தச் சவுக்காரத் தட்டுப்பாட்டைப்பற்றி அறியேல்லையோ?" எண்டார் தம்பர். "எடேயப்பா நீ பொருளாதாரத் துக்கையுள்ள அரசியலை விளங்கிக்கொள்ளாமலுக்கு இருக்கிறாய்..." எண்டு இழுத்தார் முருகேசர். "அண்ணையாணை பொருளாதாரத்துக் குள்ளை அரசியலோ? விளங்கிறமாதிரிச் சொல்லுங்கோவன்..." எண்டு தம்பர் கெஞ்சினார்.

"எடப்பா தம்பு எண்டு உற்சாகமானர் முருகேசர். எங்கடை நாட் டிலை எதுக்கையடா அரசியல் இல்லை? எல்லாத்துக்கையும் இருக் கிற அரசியல் பொருளாதாரத்துக்கை மட்டும் இல்லாமலுக்குப் போகி டுமோ சொல்லு பாப்பம்?" எண்டபடி என்னையும் ஒருக்காப் பாத் தார். "உண்மைதானப்பா... எதையெடுத்தாலும் எல்லாத்துக்கையும் அரசியல்தானே... அதுகும் ஒரு குடும்பத்துக்கைதானே?" எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க "உது தெரிஞ்ச விசயந்தானே..." எண் டார் தம்பர் எரிச்சலோடை.

"அதுதானடா தம்பு இப்ப பிரச்சனையே... சனத்துக்குப் பழக்க மான சாமானுகளை வெளியாலை விடாமலுக்கு ஒளிக்கிறது... சனம் ஐயோ ஆத்தேயெண்டு அலைஞ்சு களைச்சு என்னடாப்பா விலை யெண்டாலும் கைக்குக் கிடைச்சாச் சரி எண்டிற நிலைக்கு வரும்... அந்த நேரம் பாத்து விலையைக் கண்டபடி கூட்டுறது... சனமும் சாமான் கிடைச்சதே காணுமெண்டு இருந்திடும்... இதுதான் நடந் தது... முந்திச் சண்டையை வெல்லத்தானெண்டு... இப்ப டொலரை எடுக்கத்தானெண்டு.. விளக்கம் வேறை..." எண்டார் முருகேசர்

இந்தக் கதையளைக் கேட்டாரோ என்னவோ வல்லியம்மான் "எத் தனை காலந்தான் ஏமாத்துவார் இந்த நாட்டிலே" எண்டுபாடிக்கொண்டு உள்ளை வந்தார். பெரிசாச் சிரிச்சபடி "சனத்துக்கு விளங்கியிட்டுது... அதுகும் அவையின்ரை ஆக்களுக்குக் கொஞ்சம் கூடவாய் விளங்கியிட்டுது... ஏமாத்துப்பட்டுப் போனமெண்டிற கொதிப்பு... பாத்தியளே என்ன நடக்குதெண்டு?" எண்டார் வல்லியம்மான்.

"அதுசரிதான் அம்மான் உங்கடை பாடுகளும் கஸ்ரம்வரும்போலை?" எண்டார் முருகேசர். "எடேய் (தணிக்கைச் சொற்கள்) எரிபொருளை வெளியிலையிருந்தல்லே காசு குடுத்துக் கொண்டாறாங்கள்... நாங் கள் உள்ளூர் உற்பத்திக்காறர்.... அது சரி உந்த மண்ணெண்ணைக்கு தட்டுப்பாடு ஏன் வந்ததெண்டு சொல்லுங்கோ பாப்பம்?" எண்டார் வல்லியம்மான் சவால் மாதிரி. நாங்கள் ஒவ்வொண்டைச் சொல்லச் சிரிச்சார் ஒரு சிரிப்பு... "பேயங்களடா நீங்கள்... பெற்றோலுக்கும் டீச லுக்கும் கலக்கிறதுக்கு எடுத்ததாலைதான் பிரச்சனையாப் போச்சு..." எண்டு சிரிச்சார். "இருக்கும் என்ன?" எண்ட வாயைப்பிழந்தார் தம் பர்.

"உவங்கள் போ எண்டிற ஆட்சியாளர் உண்மையிலையே வலு விண்ணருகள் கண்டியளே? எல்லாத்தையும் முதலிலையே பிளான் பண்ணித்தான் செய்யிறாங்கள்.." எண்டார் வல்லியம்மான். "என்னம் மான் சொல்லுறியள்..." எண்டன் நான். "இப்பபார் சவுக்காரத்திலையும் பிரச்சனை.. விலை பறக்குது...தட்டுப்பாடு... உனக்கு காஸ் மண் ணெண்ணை கறன்ற் எண்டதுகளை கட்டுப்படுத்தினவங்களோ இல்லையோ?" எண்டு வல்லியம்மான் முடிக்கமுன்னம் "அதுக்கென்னம் மான்?" எண்டுது தம்பர்.

"அப்பிடிக் கேளடா தம்பா...அடுப்பெரிக்கிறதுக்கு வழி காட்டி யாச்சல்லே. சாம்பல் வருமல்லே போட்டுத் தோச்சுப்பார்... என்ன டாப்பா நீங்களும் அவங்களை மாதிரியே புலம்புறியள்? எங்களுக்கு உதுகள் என்னடா புதிசோ?" எண்டபடி எழும்பிப் போட்டார். உண் மைதான் எண்டார் முருகேசர். "எங்களுக்கு தட்டுப்பாடுகளோடை செல்லடி பொம்பரடியளுமல்லே இருந்தது... இப்ப பழசுகள் மறந்து போச்செண்டதுதான் பெரிய பிரச்சனையாக் கிடக்குது..." எண்டு கொண்டு வீட்டை வந்திட்டன்.

**உக்ரைன் போரில் ...**

அதாவது சோவியத் ஒன்றியக் காலகட்டத்தில் உக்ரைன் பிராந்தியத்தில் வைத்துதான் உருவாக்கப்பட்டது. அமெரிக்காவுக்கு நிகராக தன்னைப் பலப்படுத்திக்கொள்ளும் நோக்கில் ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட இக்கப்பல், 1980களின் மத்தியில் பயன்பாட்டுக்கு வந்தது. அதிலி ருந்து ரஷ்யாவின் படை பலத்தின் அடையாளங்களில் ஒன்றாக மோஸ்க்வா பார்க்கப்பட்டது. அப்போது அதன் பெயர் 'ஸ்லாவா'. சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்குப் பிறகு, ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவைக் குறிக்கும் வகையில், அது மோஸ்க்வா எனப் பெயர் மாற்றப்பட்டது.

மோஸ்க்வா கப்பல் 610 அடி நீளம் கொண்டது. அதாவது இரண்டு கால்பந்தாட்ட மைதானத்தின் நீளத்துக்குச் சமமானது. இதன் எடை 12,490 டன். எதிரிக் கப்பலை தாக்குவதற்கென்று 16 பால்கன் ஏவு கணைகள் இந்தக் கப்பலில் இருந்தன. தொலைதூர இலக்குகளையும் அருகிலுள்ள இலக்குகளையும் துல்லியமாகத் தாக்கும் எஸ்-300எஃப், ஓஎஸ்ஏ - எம்ஏ ஏவுகணைகளும், ஒரு நிமிடத்தில் 5000 குண்டுகளை வெடிக்கும் துப்பாக்கிகளும் இதில் இருந்தன. உலகின் பலம் மிக்க போர்க் கப்பல்களின் ஒன்றாக மோஸ்க்வா பார்க்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு ஜார்ஜியாவுடனான மோதலில், 2014ஆம் ஆண்டு கிரைமியாவுடனான மோதலில், 2015இல் சிரியாவுடனான மோதலில் மோஸ்க்வாதான் முன்னின்றது. 2014இல் கிரைமியாவை ரஷ்யா பலவந்தமாகத் தன்னுடன் இணைத்துக்கொண்டபோதே, உக் ரைன் சுதாரித்துவிட்டது. அப்போதுதான் மோஸ்க்வாவை அழிக்கும் வகையில் ஏவுகணையை உருவாக்க உக்ரைன் முடிவுசெய்தது. அந்த ஏவுகணையின் பெயர் 'நெப்டியூன் - 2'. இந்த ஏவுகணையைப் பயன் படுத்திதான் தற்போது மோஸ்க்வா அழித்துள்ளதாக உக்ரைன் தெரி வித்துள்ளது.

இந்தக் கப்பலில் வீரர்கள், அதிகாரிகள் என 400க்கும் மேற்பட்ட வர்கள் இருந்தனர் என கூறப்படுகிறது. இதுவரையில் ஒருவர் உயி ரிழந்துள்ளதாகவும், 27 பேர் காணாமற்போயுள்ளனர் எனவும், மீத முள்ளவர்கள் மீட்கப்பட்டனர் எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. இறந் தது அந்தக் கப்பலின் கேப்டன்தான் என்கிறது உக்ரைன். ஆனால், கப்பல் தாக்குதலில் இறந்தவர்கள் குறித்த தெளிவான விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை.

**கனவு விமானம்**

ரஷ்யா தன் பெருமைமிகு வாகனங்களில் ஒன்றான கப்பலை இந் தப் போரில் இழந்தது என்றால், உக்ரைன் தன்னுடைய பெருமிதங்க ளில் ஒன்றாகக் கருதிய பெரும் விமானத்தை இழந்திருக்கிறது. உக்ரை னின் தன்னுடைய பெருமை மிகு அடையாளங்களில் ஒன்றாகக் கருதிய சரக்கு விமானம் மிரியா (MRIYA) என்று அழைக்கப்படும் அன்டோனோவ் ஏஎன் 225 (ANTONOV AN-225). அடிப்படையில் இது ஒரு சரக்கு விமானம். ஆனால், உலகிலேயே பெரும் சரக்கு விமானம். மாசி 27ஆம் நாள் ரஷ்யாவால் இது உருக்குலைக்கப்பட்டது. கீவ் நகரத்தில் உள்ள விமானத் தளத்தில் அவ்விமானம் நிறுத்தப்பட்டிருந்தபோது இந்தத் தாக்குதலை ரஷ்யா மேற்கொண்டது.

சோவியத் ஒன்றியம் 1960, 1970களில் விண்வெளி ஆராய்ச்சியில் கவனம் செலுத்திவந்தது. அமெரிக்காவுக்குப் போட்டியாக செயல் பட்டுவந்த சோவியத் ஒன்றியம், நவீன ரக செயற்கைக்கோள்கள், ராக்கெட்டுகள் உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது. செயற் கைக்கோள் மற்றும் ராக்கெட் பாகங்கள் ஓரிடத்தில் தயாரிக்கப்படும். பிறகு அவை மற்றோர் இடத்துக்குக் கொண்டுவந்து பொருத்தப்படும். அந்தப் பாகங்கள் எடை மிகுந்தவை. அவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு கொண்டுசெல்வது அவ்வளவு எளிதானதாக இல்லை.

இத்தகைய எடை மிகுந்த பாகங்களை ஏற்றிச் செல்வதற்கென்று தனியே ஒரு விமானத்தை உருவாக்க சோவியத் ஒன்றியம் திட்ட மிட்டது. உக்ரைன் நகரான கீவ்வைத் தலைமையிடமாகக் கொண்ட அன்டோனோவ் நிறுவனம் இந்த விமானத்தை உருவாக்கும் பணியில் இறங்கியது. அப்படியாக உருவானதுதான் மிரியா. மிரியா என்றால் 'கனவு' என்று அர்த்தம். 1988ஆம் ஆண்டு மிரியா செயல்பாட்டுக்கு வந்தது.

வீழ்த்தப்படும் வரை உலகின் எடை மிக்க விமானமாக மிரியா தான் அடையாளப்பட்டுவந்தது. 290 மீட்டர் நீளம் கொண்ட இவ் விமானம் 250 டன் வரையில் சரக்குகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. மணிக்கு 800 கிமீ வேகத்தில் செல்லக் கூடியது. மிரியா போலவே கூடுதலாக இரண்டு விமானங்களை உருவாக்க திட்டமிடப் பட்டது. அதற்கான பணிகள் தொடங்கிய சமயத்தில்தான், சோவியத் ஒன்றியம் உடைந்தது (1991). அதையடுத்து இந்த விமானம் உக்ரைன் வசம் வந்தது. அப்படியாக உக்ரைனின் பெருமைமிகு அடையா ளங்களில் ஒன்றாக இவ்விமானம் மாறியது. இப்படித் தனிச்சிறப்பு மிக்க விமானத்தைத்தான் ரஷ்யா தாக்கி அழித்தது.


உள்ளபடி சரக்கு விமானத்தை வீழ்த்துவதற்கான தேவை என்று ஏதும் ரஷ்யாவுக்கு இல்லை. ஆனால், உளவியல் ரீதியாக உக்ரை னைப் பலவீனப்படுத்த மிரியாவைப் பயன்படுத்திக்கொண்டது ரஷ்யா. "எங்கள் கனவு விமானத்தை ரஷ்யா அழித்திருக்கலாம். ஆனால் வலிமையான, சுதந்திரமான உக்ரைன் எனும் எங்கள் கனவை ரஷ்யா வால் அழிக்க முடியாது" என இதற்கு உக்ரைன் எதிர்வினையாற்றினாலும் எல்லா சோகங்களுக்கு மத்தியிலும் இந்தச் சோகமும் அதனைச் சூழ்ந்துகொண்டது உண்மை. ரஷ்யாவும் மோஸ்க்வாவின் அழிவால் அதே விதமான சோகத்துக்குள்ளானது.

இத்தகு பெருமிதங்கள் எல்லாமே ஆயுத வியாபாரிகளால் உரு வாக்கப்படும் பெருமிதங்கள்தான். சாமானிய மக்களுக்கு இவற்றால் ஆகப்போவது எதுவுமே இல்லை என்றாலும், இப்படியான போலி பெரு மிதங்கள் வாயிலாகவே அரசியல் வியாபாரிகளும் பிழைக்கிறார்கள் என்ற குரல்களும் இரு தரப்பிலும் கேட்காமல் இல்லை. ஆனால், இரு நாடுகளுமே வீழ்த்தப்பட்டதை விஞ்சும் ஒன்றை உருவாக்கும் சமிக்ஞைகளை வெளியிட்டிருக்கின்றன. ஆக ஆயுத வியாபாரிக ளுக்கும், அரசியல் வியாபாரிகளுக்கும் மேலும் இரு புதிய வியா பாரங்கள் காத்திருக்கின்றன!

# சிறைக்குள்...

54

தர்மராசா




## சிறைச் சாப்பாடு : கைதிகளே கைதிகளுக்கு கொடுக்கும் அன்னதானம்

பல சிறைச் சாலைகளில் பெரிய பாத்திரங்களில் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதற்குள் அரிசி யைக் கழுவாமலே கொட்டி அவிய வைப்பதுண்டு. இதனால் சோற்றில் கயர்த் தன்மையும் மணமும் இருக்கும். அதற்கு மற்றோர் காரணம், அரிசியின் தரம் மிக மோசமாக இருப்பதுமாகும்

மனிதனுக்குத் தண்டனை கொடுப்பதற்காக அனுப்பப்படுகின்ற இடம் சிறை என்பதால் அங்கு அறுசுவை உணவை எதிர்பார்க்க முடியாது. உயிர்வாழ்வதற்காக 3 நேரங்களும் ஏதோ சாப்பிட்டோம் என்பது மட்டுமே உண்மை. ஒவ்வொரு நாளும் 3 நேரமும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கைதிகளுக்கு குற்றம் தீர்க்கப்பட்ட ஒரு சில கைதிகள் சமைத்துப்போடுவது என்பது இயலாத காரியம். அங்கு சமையல் செய்பவர்கள் கடூழியச் சிறைத்தண்டனை பெற்ற கைதிகள் என்பதால் சிறை அதிகாரிகள் சொல்வதைச் செய்துதான் ஆகவேண்டும். அவர்களது பணி என்பது மிக உயர்வானது. அவர்கள் சமைத்துப் பரிமாறுகின்ற உணவைக் கைதிகளால் கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற அன்னதானம் எனலாம்.

எல்லாச் சிறைகளிலும் காலையில் பாணும் சம்பலும் தருவார்கள். பகல், இரவு என இரண்டு நேரங்களிலும் சோறு. ஒரு கைதிக்குப் பகல் சாப்பாட்டுக்காக 225 கிராம் அரிசியும் இரவுச் சாப்பாட்டுக்காக 170 கிராம் அரிசியும் வழங்கப்படுகின்றன. பல கைதிகளுக்கு இந்தச் சோறு போதுமானதாக இருப்பதில்லை. பல சிறைச் சாலைகளில் பெரிய பாத்திரங்களில் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதற்குள் அரிசியைக் கழுவாமலே கொட்டி அவிய வைப்பதுண்டு. இதனால் சோற்றில் கயர்த் தன்மையும் மணமும் இருக்கும். அதற்கு மற்றோர் காரணம், அரிசியின் தரம் மிக மோசமாக இருப்பதுமாகும்.



சித்திரை 2002 காலப்பகுதியில் கேள்விப்பட்டதன்படி ஒரு கைதிக்கு ஒரு நாள் சாப்பாட்டுக்காக 62 ரூபா ஒதுக்கப்பட்டது. அத்துடன் ஒரு கைதிக்கு 56 கிராம் மீனும் 56 கிராம் இறைச்சியும் 28 கிராம் கீரையும் கிழமையில் 3 நாள்களுக்குச் சாம்பல் வாழைக்காய்க் கறியும் வழங்கப்படவேண்டும் என்பது சிறை நடைமுறையாகும். சாம்பல் வாழைக்காய் ஆண்மையைக் குறைக்கும், அல்லது பாலியல் ஈடுபாட்டைக் குறைக்கும் என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இதைச் போகம்பரைச் சிறைச்சாலையில் கிரமமாகக் கடைப்பிடித்து வந்தார்கள். போகம்பரைச் சிறைச்சாலையிலுள்ள நடைமுறைகள் பிரித்தானியர் காலத்துச் சட்ட திட்டங்களை அவ்வாறே பின்பற்றியதாக இருந்தன.

நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 சிறைகளிலும் பூசா சிறையில் வழங்கப்பட்ட சாப்பாட்டைத்தான் முதல்தர சாப்பாடு என்பேன். அந்தச் சமையல் அறைக்குச் சமைக்கச் சென்ற நண்பர்கள் ஒரு தடவை சொன்னார்கள், அந்த அறையை மிகவும் சுதத்தமாக வைத்திருக்கிறார்கள் என்றும் கிட்டத்தட்ட 200க்கும் குறைவான கைதிகள் இருந்ததால் அதை அவ்வாறே நிர்வகிப்பது சுலபம் என்றும். பூசா நிர்வாகம் அவற்றையெல்லாம் ஒழுங்காகக் கவனித்து வந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஹப்பு ஆராய்ச்சி என்ற சிறைச்சாலை அத்தியட்சகர் நிர்வாக விடயத்தில் மிகவும் கடுமையானவராக இருந்ததும் இதற்கு இன்னோர் காரணமாகும். அதையும்விடச் சமையலுக்குப் பொறுப்பாக இருந்த லிவேரா, சமன் ஆகிய அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் முழு நேரமும் வியர்க்க வியர்க்க வேலையில் ஈடுபட்டிருந்ததும் ஒரு காரணம் எனலாம்.

மிகமோசமான சாப்பாடு அனுராத புரம் சிறைச்சாலையில்தான் கிடைத்தது. அனுராதபுரச் சிறைச் சாலையில் மரக்கறிச் செய்கைக்கு அச்சுக் கைதிகள் பயன்படுத்தப்படுவதுடன் அதற்கான எல்லா வசதிகளும் இருந்தும் எல்லா வகையான கீரைகளையும் சுத்தப் படுத்தாமலே சமைத்துத் தருவார்கள். ஒரு கைதிக்குரிய சாப்பாட்டுக் காசில் செய்கை பண்ணப்படுகின்ற மரக் கறிகளைப் பயன்படுத்தினாலே அதிகளவு லாபம் அடைய வாய்ப்பிருந்தும்கூட அனுராதபுரச் சிறை நிர்வாகம் அதைச் செய்யாதது குறைபாடுதான். அனுராதபுரத்துடன் ஒப்பிடும்போது பூசாவில் எந்த விதமான பொருளும் சிறைச்சாலை வட்டாரத்தில் பெறக்கூடியதாக இருக்கவில்லை. இருந்தும் அங்கே சாப்பாடு மேம்பட்டதாக இருந்தது.

(தொடரும்)

# மலைகளின் வெற்றி

**வில்லியம் பாக்னர்**

**தமிழில் கார்குழலி**



குன்றின் உச்சியில் இருந்தது அந்த மரத்தாலான வீடு. வீட்டில் இருந்த ஐவரும் ஜன்னலருகே நின்றிருந்தனர். குதிரையில் சவாரி செய்தபடி குன்றின்மேல் ஏறி வந்த புதியவர்களைக் கண்ணெடுக்காமல் பார்த்தனர். அவர்கள் ஒருவழியாகச் சேறும் சகதியுமாக இருந்த சரிவான பாதையில் ஏறி வாயில் கதவருகே வந்துசேர்ந்தனர். குதிரையை வழிநடத்தியவன்தான் முதில் வந்தான். முகத்தை மறைக்கும் பெரிய அகன்ற தொப்பியும் இற்றுப்போன சாம்பல் நிற மேலங்கியும் அணிந்திருந்ததால் அவன் உடல் எந்த வடிவமுமின்றி இருப்பதைப் போலத் தோற்றமளித்தது. இடது கையை அங்கிக்கு வெளியே நீட்டி கடிவாளத்தைப் பிடித்திருந்தான்.

வெள்ளி முலாம் பூசப்பட்ட கடிவாளம். உயர்ரகச் செவளை நிறக் குதிரை, எலும்பும் தோலுமாக உடல் முழுவதும் சேறு அப்பி இருந்தது. சேணத்துக்குப் பதிலாகக் கருநீல நிற இராணுவ படுக்கை விரிப்பை மடித்து கயிற்றால் கட்டி இருந்தார்கள். இரண்டாவது குதிரை உடல் சிறுத்து தலை பெருத்து குட்டையாக இளம் பழுப்பும் சிவப்பும் கலந்த நிறத்தில் இருந்தது. அதன் மீதும் திட்டுத்திட்டாகச் சேறு தெரித்திருந்தது. கயிற்றாலும் கம்பியாலும் செய்யப்பட்ட கடிவாளத்தை அணிந்து இராணுவ சேணம் பூட்டி இருந்தது. அதன் மேலே குறுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்த உருவம் ஒரு குழந்தையைவிடவும் சற்றே பெரிய அளவில் இருந்தது. குதிரையின் பக்கவாட்டில் தொங்கிய அங்கவடியை அதன் கால்கள் எட்டவில்லை. தூரத்தில் இருந்து பார்க்கையில் ஆடை அணியாதது போல இருந்தது அல்லது இதற்கு முன்னர் மனிதர்கள் பார்த்திராத ஆடையை அணிந்திருந்ததோ என்னவோ!

வீட்டுக்குள் இருந்த மூன்று ஆண்களில் ஒருவன் ஜன்னலை விட்டு எங்கோ வேகமாகப் போனான். தலையைத் திருப்பிப் பார்க்காமலே அவன் அறையைத் தாண்டிச் செல்வதையும் நீளக்குழல் துப்பாக்கியை எடுத்து வருவதையும் அவர்களால் கேட்க முடிந்தது.

'வேண்டாம், அதைப் பயன்படுத்தக்கூடாது,' அங்கிருந்த ஆண்களில் வயதில் மூத்தவர் சொன்னார்.

'அந்த மேலங்கியை நீங்கள் கவனிக்கவில்லையா?' அங்கிருந்த இளையவர்களில் ஒருவன் கேட்டான். 'அது கலகக்காரர்கள் அணியும் சீருடை.'

'நீ சொல்வதை ஒத்துக்கொள்ள மாட்டேன். அவர்கள் சரணடைந்து விட்டார்கள். நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்,' என்றார் மூத்தவர்.

குதிரைகள் வாயில் கதவருகே வந்து நின்றதை ஜன்னலின் வழியே பார்த்தனர். வீட்டின் வேலி, பள்ளத்தாக்கின் சரிவான பாறையாலானது. அதில் ஹிக்கரி மரத்தாலான கதவு பொருத்தப்பட்டு இருந்தது. அதைத் தாண்டி தொலைவில் தெரிந்த நீண்டு அகன்ற மலைத்தொடர்கள் கீழ்வானத்தோடு கலந்து மறைந்துபோயின.

இரண்டாவது குதிரையின் மேலே உட்கார்ந்திருந்த உருவம் கீழே இறங்கியது. உயர்ரகக் குதிரையின் இலகானை பிடித்திருந்தவனிடம் தன்னுடைய குதிரையின் இலகானையும் கொடுத்தது. பிறகு கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து பாதையின் மேலேறி வந்தது. சிறிது நேரத்தில் ஜன்னலில் இருந்து பார்க்க முடியாத முன்வாயிலின் வளைவில் திரும்பி மறைந்து போனது. அது கதவைத் தட்டும் ஓசை கேட்டது. அவர்கள் ஒருவரும் நகராமல் அங்கேயே நின்றார்கள். மீண்டும் கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

சிறிது நேரம் கழித்து மூத்தவர் தலையைத் திருப்பாமல், 'யாரென்று போய்ப் பார்,' என்றார்.

அங்கே இருந்த பெண்களில் மூத்தவர் ஜன்னலை விட்டு நகர்ந்தார். தரை வெறுமையாக இருந்ததால் நடந்து போகும் ஓசை கேட்கவில்லை. கதவைத் திறந்ததும் ஏப்ரல் மாதப் பின்மதியத்தின் குளிர்ந்த ஈரமான ஒளி அவரின் சிறிய உருவத்தின் மீதும் சுருக்கம் நிறைந்த உணர்வுகளை வெளிப்படுத்தாத முகத்தின் மீதும் வடிவமற்ற சாம்பல் நிற ஆடையின் மீதும் விழுந்தது.

வாயில் கதவுக்கு வெளியே நின்ற உயிரினம் குரங்கைவிடப் பெரிதாக இருந்தது. அது அணிந்திருந்த ஃபெடரல் படையின் சீருடையான கருநீல மேலங்கி பூதாகரமாக இருந்தது. தலைக்கு மேலே கூடாரம் போலக் கூம்பாக கட்டியிருந்த மேலங்கி தோள்களின் மீது வழிந்தது. இராணுவப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வண்டியை மூடும் கித்தான் துணியில் இருந்து வெட்டி எடுத்த துண்டு. மேல் பகுதியில் இருந்த ஓட்டையின் வழியே கண் வெள்ளை முழியைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை, அதுவும் ஒரே நொடிதான். பார்க்க பேயைப் போல இருந்தது. வெற்றுக் காலுடன் சாயம் மங்கிய ஆடையணிந்து நின்ற பெண்மணியையும் அவளுக்குப் பின்னால் வீட்டின் முன்னறை வெறுமையாக இருந்ததையும் உற்றுக் கவனித்தான் அந்தக் கறுப்பினத்தவன்.

'எஜமானர் மேஜர் சோஷே வேடல் தன்னுடைய வணக்கத்தைச் சொல்லி அனுப்பினார். அவருக்கும் அவருடைய உதவியாளனுக்கும் இரண்டு குதிரைகளுக்கும் இன்று இரவு தங்க இடம்வேண்டும் என்ற விண்ணப்பத்தைத் தெரிவித்தார்.' பெருமை பீற்றும் கிளியின் குரலில் பேசிய அவனை உற்றுப் பார்த்த அந்தப் பெண்மணியின் முகம் உணர்வற்ற முகமூடியாக இருந்தது. 'நாங்கள் அங்கே போய் அந்த யாங்க்கி படைகளோடு சண்டையிட்டோம்,' என்றான் கறுப்பினத்தவன். 'இப்போதைக்கு சண்டையை நிறுத்திவிட்டு வீடு திரும்புகிறோம்.'

அவள் ஓர் உருவபொம்மை அல்லது ஓவியம் போலவும் அதற்குப் பின்னால் இருந்து அவள் குரல் மட்டும் கேட்பது போலவும் தொனித்தது. 'அவரைக் கேட்க வேண்டும்.'

'பணம் கொடுத்துவிடுவோம்,' என்றான் கறுப்பினத்தவன்.

'பணமா?' என அவனை உற்றுப் பார்த்தாள். 'இது ஒன்றும் தங்கும் விடுதியல்ல.' என்றாள்.

கைகளை அசைத்தும் நீட்டியும் விலாவாரியாகப் பேசினான் கறுப்பினத்தவன். 'அதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இதைவிடவும் மோசமான இடங்களில் தங்கி இருக்கிறோம். மார்ஷ் சாஷே வெடில் வந்திருக்கிறார் என்று மட்டும் சொல்லுங்கள்.'

அவள் அவனுக்குப் பின்னால் பார்ப்பதைக் கவனித்தான். நைந்து போன சாம்பல் நிற அங்கியை அணித்திருந்தவன் இப்போது வேலிக் கதவில் இருந்து பாதி தூரம் வரையிலும் உள்ளே வந்திருந்தான், படியில் ஏறிக்கொண்டிருந்தான். கான்ஃபெடெரேட்டுகளின் அலுவலர் இலச்சினை பொறித்த தொப்பியை இடது கையால் கழற்றினான். கறுத்த முகமும் கரிய விழிகளும் தலைமுடியும் கொண்டவன். முகம் இறுகிப்போய் திமிர்பிடித்தவனைப் போலத் தோற்றமளித்தான். உயரமில்லை என்றாலும் கறுப்பினத்தவனை விடவும் ஐந்தாறு அங்குலம் அதிகம். அவனுடைய முக்காடு நைந்துபோய் தோள் பகுதியில் நிறம் மங்கியிருந்தது. கீழாடை நைந்து நூல்பிரிந்து சேறும் சகதியுமாக இருந்தது. ஆடையை மீண்டும் மீண்டும் ஒட்டுப்போட்டு மீண்டும் மீண்டும் துவைத்ததால் நூலெல்லாம் பிரிந்திருந்தது.

'வணக்கம் அம்மையீர். இன்று இரவு தங்க இடம் வேண்டும். எனக்கும் உதவியாளனுக்கும் எங்கள் குதிரைகளுக்கும் இடமிருக்குமா?'

அந்தப் பெண்மணி கண்கொட்டாமல் ஏதோ ஆவியைப் பார்ப்பது போன்ற ஆர்வத்தோடு அவனைப் பார்த்தாள்.

'கேட்டுத்தான் சொல்லமுடியும்,' என்றாள்.

'அதற்கான பணத்தை கொடுத்துவிடுகிறேன். இது எப்படிப்பட்ட காலமென்பது தெரியும்,' என்றான்.

'அவரைக் கேட்க வேண்டும்,' என்றபடி உள்ளே திரும்ப எத்தனித்தவள் அப்படியே நின்றாள். அவளுக்குப் பின்னால் அறையினுள் நுழைந்தார் அந்த மூத்த ஆண்மகன்.

பெரிய உருவம். ஜீன்ஸ் துணியாலான ஆடையை அணிந்திருந்தார். தலைமுடி நரைத்து கண்கள் வெளுத்திருந்தன.

'என் பெயர் சாஸியர் வெடெல்,' என்றான் சாம்பல் நிற உடை அணிந்தவன். 'வர்ஜினியாவில் இருந்து என்னுடைய மாகாணமான

மிஸ்ஸிஸிப்பிக்குப் போகிறேன். இப்போது நான் இருப்பது டென்னெஸ்ஸிதானே?' எனக் கேட்டான்.

'இது டென்னெஸ்ஸிதான்,' என்றார் வீட்டுக் காரர். 'உள்ளே வாருங்கள்.'

குதிரைகளை இலாயத்துக்கு இட்டுச் செல்லுமாறு கறுப்பினத்தவனிடம் சொன்னான் வெடெல். கறுப்பினத்தவன் வாயிலை நோக்கி நடந்தான். அவன் அணிந்திருந்த முக்காட்டினால் வடிவமே இல்லாதவனைப் போலத் தோற்றமளித்தான். வெற்றுக் காலோடு நின்ற பெண்மணியையும் வெறுமையான அறைகள் கொண்ட வீட்டையும் பார்த்த மாத்திரத்தில் ஆணவம் அவன் தலைக்கேறி இருந்தது. இலகான்களை இழுத்து குதிரைகளைப் பார்த்து தேவையில்லாமல் கத்தினான். அவையோ இதற்கெல்லாம் ஏற்கெனவே பழக்கப்பட்டவை போல அவனைச் சட்டைசெய்யவே இல்லை. சொல்லப் போனால் அவனுடைய குரலை அவனே சட்டைசெய்யவில்லை. குரலை உயர்த்திப் பேசியது குதிரைகளை இட்டுச்செல்வதோடு தொடர்புடைய செயலாக இருந்தது. மூச்சுவிடுவது போல இயல்பான செயலாகவும் அதைக் குதிரைகளும் கறுப்பினத்தவனும் ஒப்புக்கொண்டதால் முற்றிலும் மறந்துவிட்டதைப் போலவும் இருந்தது.

## II

புதிய மனிதர்களின் வருகையால் மகளைச் சமையலறைக்குள் துரத்தியிருந்தார் தந்தை. ஆனால் சுவர் வழியாகப் பக்கத்து அறையில் கூடியிருந்தவர்களின் குரல் கேட்டது. அவளுக்கு இருபது வயதிருக்கும். பளபளப்பான தலைமுடி, வழவழப்பான கைகள், பெரிய உருவம். காலணி இல்லை, மாவு மூடை துணியில் தைக்கப்பட்ட ஆடையை அணிந்திருந்தாள். சுவரோடு ஒட்டிக்கொண்டு அசையாமல் நின்று தலையைச் சாய்த்து கண்களை அகல விரித்து அடுத்த அறையில் அப்பாவும் அந்தப் புதிய மனிதனும் பேசுவதை உற்றுக்கேட்டாள்.

அந்த வீடு மரத்தாலானது. வீட்டின் சரிவான மரச்சுவரை ஒட்டி கட்டப்பட்டிருந்தது சமையலறை. அடுப்பின் சூட்டினால் சுவர்களுக்கு இடையே இருந்த களிமண் காய்ந்து ஆங்காங்கே பொடிந்து உதிர்ந்து போயிருந்தது. சத்தம் இல்லாமல் முன்னால் சாய்ந்து நின்று சுவரில் இருந்த வெடிப்பின் வழியே கண்ணை அழுத்தினாள். அறையில் இருந்த மேசையின் மேல் களிமண் குடுவையும் யூ.எஸ். ஆர்மி என்று எழுதப்பட்ட தோட்டாக்கள் கொண்ட பெட்டியும் மட்டுமே இருந்தன. அவளுடைய சகோதரர்கள் இருவரும் நாற்காலியில் அமர்ந்திருந்தனர். இருவரில் இளையவன் கதவைப் பார்த்து உட்கார்ந்திருந்தான். அவளால் பார்க்க முடியவில்லை என்றாலும் அந்தப் புதியவனும் அறையில் இருப்பதை அறிவாள். அவளுடைய மூத்த சகோதரன் பெட்டிக்குள் இருந்த தோட்டாக்களை ஒவ்வொன்றாக வெளியே எடுத்து இராணுவப் படையின் அணிவகுப்பை போல அடுக்கி வைத்தான். அவன் முதுகுக்குப் பின்னால் இருந்த கதவருகே புதியவன் நிற்பதை அறிவாள். ஓசை எழுப்பாமல் மூச்சுவிட்டாள்.

'வேட்ச் அப்போதே அவனைச் சுட்டிருப்பான்,' மூச்சுவிட்டபடியே முன்னே சாய்ந்தாள். 'இனி சுட்டுவிடுவான் என்று நினைக்கிறேன்.'

அவளுடைய தாய் சமையலறையை நோக்கி நடந்து வரும் ஓசை கேட்டது. சுவரைக் கடக்கும் போது தாயின் உருவம் அதிலிருந்த பிளவைச் சற்று நேரம் மறைத்தது. தாய் சமையல் அறைக்குள் நுழைந்த பிறகும் அவள் கொஞ்சமும் அசையவோ நகரவோ இல்லை. சீராக மூச்சு விட்டபடி முன்னால் சாய்ந்து பிளவின் வழியே பார்க்கத் தொடங்கினாள். அம்மா சட்டி பானையை உருட்டும் சத்தம் கேட்டது. அப்போதுதான் அந்தப் புதியவனைப் பார்த்தாள், தான் மூச்சுவிடக்கூட மறந்துவிட்டதை உணரவில்லை. நைந்துபோன மேலங்கியை அணிந்திருந்தான், இடது கையில் தொப்பியைப் பிடித்திருந்தான்.

வேட்ச் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை.


'என் பெயர் சாஸியர் வெடெல்,' என்றான் புதியவன்.

'சோஷே வெடெல்.' பொடிந்து போன களிமண் நிறைந்த சுவரின் வழியே பெயரை முனகினாள் அந்தப் பெண். இப்போது அவனை முழுவதுமாக பார்க்க முடிந்தது. அவன் அணிந்திருந்த மேலங்கி கறை படிந்து பட்டியிடப்பட்டு நூல் பிரிந்து தொங்கியது. தலையை மேல் நோக்கிப் பிடித்திருந்தான். முகம் சோர்ந்துபோய் இறுக்கமாக இருந்தாலும் அகந்தையும் இறுமாப்பும் கொண்டவனைப் போலத் தோற்றமளித்தான். வேறொரு உலகத்தைச் சேர்ந்தவனைப் போலவும் முற்றிலும் மாறுபட்ட காற்றை சுவாசிப்பவனைப் போலவும் அவனுடைய நாளங்களில் ஓடுவது புதுவகையான இரத்தம் போலவும் நடந்துகொண்டான்.

'சோஷே வெடெல் ,' அவன் பெயரை மீண்டும் உச்சரித்தாள்.

'கொஞ்சம் விஸ்கி அருந்துங்கள்,' நாற்காலியை விட்டு எழுந்திராமல் சொன்னான் வேட்ச்.

மூச்சுவிட மறந்ததைப் போலவே அவர்கள் பேசுவதையும் அவள் கேட்கவில்லை, அதைக் கேட்பது முக்கியமல்ல என உணர்ந்தாள். புதியவனின் வருகையால் உருவான சூழலில் ஆவலுக்கு இடமில்லை என்பது போலத் தோன்றியது. அந்தக் கணத்தில் அந்தச் சூழலில் தன்னையும் பொருத்திக்கொண்டாள். புதியவன் மேசையருகே நின்றபடி வேட்ச்சை பார்ப்பதைக் கவனித்தாள். கையில் தோட்டாவை வைத்திருந்த வேட்ச் திரும்பி புதியவனைப் பார்த்தான். ஓசையின்றி மூச்சுவிட்டபடி எல்லாவற்றையும் பிளவின் வழியே பார்த்தாள். பிளவின் வழியே கேட்ட குரல்களில் எரிச்சலோ உட்பொருளோ தொனிக்கவில்லை. இருண்மையும் வன்முறையும் கனன்றுகொண்டே இருக்கும் ஆண்களின் குழந்தைத்தனமான மமதையும்கூட இல்லை. 'இவை என்னவென்று உனக்குத் தெரியும்தானே?'



'ஏன் தெரியாமல்? நாங்களும் இவற்றைப் பயன்படுத்தினோம். நாங்களே செய்வதற்கான நேரமோ வெடிமருந்தோ இல்லை. அதனால் அவ்வப்போது உங்களுடையதைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. குறிப்பாக இறுதிக் கட்டத்தில் அதைத்தான் செய்தோம்.'

'இவற்றில் ஒன்று உன் முகத்தில் வெடித்தால் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்வாயோ என்னவோ.'

'வேட்ச்.' ஒரு வழியாக வாயைத் திறந்து பேசிய தந்தையைப் பார்த்தாள். அவளுடைய தம்பி திறந்த வாயோடு நாற்காலியில் இருந்து மேலே எழுந்தான். அவனுக்குப் பதினேழு வயது இருக்கும். புதியவன் வேட்ச்சைப் பார்த்தபடியே நின்றான். தொப்பியை நைந்துபோன மேலங்கியின் மேலே அழுத்திப் பிடித்திருந்தான். முகத்தில் கர்வம் அசதி இவற்றோடு கேள்வியும் தொனித்தது.

'உன் இன்னொரு கையையும் காட்டலாம். கைத்துப்பாக்கியைப் பற்றிக்கொள்ளாமல் இருப்பது குறித்து பயப்படாதே,' என்றான் வேட்ச்.

'அதைக் காட்டுவதில் எனக்கொன்றும் பயமில்லை.'

'அப்படியென்றால் கொஞ்சம் விஸ்கி அருந்து,' அலட்சியமும் அவமதிப்பும் தொனிக்க குடுவையைத் தள்ளினான் வேட்ச்.

'நன்றி, ஆனால் வயிறு சரியில்லை. மூன்று ஆண்டுகளாக நடந்த போரின் போது என் வயிற்றிடம் மன்னிப்பு கேட்டேன். இப்போது போர் முடிந்து அமைதி நிலவும் போதோ வயிற்றுக்காக மன்னிப்பு கேட்க வேண்டியிருக்கிறது. என் உதவியாளனுக்கு மட்டும் ஒரு கோப்பை தரமுடியுமா? இங்கேயே நான்கு வருடங்களைக் கழித்த பின்னும் இந்தக் குளிரைப் பொறுத்துக்கொள்ள அவன் பழகவில்லை.'

'சோஷே வெடெல்,' பொடிந்து கிடந்த தூசியின் வழியே மிதந்து வந்த குரல்களைக் கேட்டு பெருமூச்சு விட்டாள். யாரும் குரல்களை உயர்த்தவில்லை என்றாலும் அவற்றுக்கிடையே தொனித்த வேறுபாடுகளை ஒருபோதும் களைய முடியாது, அவை எதிர்நோக்கி நிற்கும் அழிவையும் தடுக்க முடியாது என்பது புரிந்தது. ஒன்று பாதிப்புக்குள்ளான குருடனுடையது. மற்றது தண்டனையை நிறைவேற்றும் குருடனுடையது: 'நீ திரும்புகையில் அது நன்றாகவே தெரியுமோ என்னவோ?'

'ஏய், வேட்ச்.'

'நிறுத்துங்கள் அப்பா. அவனும் ஒரு வருடகாலம் இராணுவத்தில் இருந்திருக்கிறான். ஒரு முறையாவது ஓடியிருப்பான். ஒருவேளை வடக்கு வர்ஜினியாவின் படையை எதிர்த்திருந்தால் இன்னும் கூடுதலான தடவைகள் ஓடியிருப்பான்.'

'சோஷே வெடெல்,' இன்னும் குனிந்து நின்றபடியே பெருமூச்சு விட்டாள். இப்போது வெடெல் அவளை நோக்கி நடந்து வருவதைப் போல இருந்தது. இடது கையில் கனமான கோப்பையைப் பிடித்திருந்தான், அதே கையின் கக்கத்தில் தொப்பியை இடுக்கி இருந்தான்.

'அந்தப் பக்கமில்லை,' என்று வேட்ச் சொன்னதும் புதியவன் திரும்பினான். 'எங்கே போக வேண்டும்?' என்றான் வேட்ச்.

'இதை என் உதவியாளனிடம் கொடுக்க வேண்டும். இலாயத்துக்குப் போக வேண்டும். இதுதானே அங்கே செல்லும் கதவு?' இப்போது பக்கவாட்டில் தெரிந்த புதியவனின் முகத்தில் அசதி, அகந்தை இவற்றோடு கேள்வி கேட்பது போன்ற பாவனையும் தோன்றியது. இருந்த இடத்தைவிட்டு நகராமல் தலையைப் பின்னோக்கி ஆட்டினான் வேட்ச். 'அந்தக் கதவருகே போகாதே.'

புதியவன் நகரவில்லை, தலை மட்டும் அசைந்தது, பார்க்கும் திசை மாறியது.

'இப்போது அப்பாவைப் பார்க்கிறான்,' என்று பெருமூச்செறிந்தாள். அப்பா ஏதேனும் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். வேட்ச்சிடம் அவனுக்குப் பயமில்லை. எனக்குத் தெரியும்.

'அந்தக் கதவருகே போகாதே. நாசமாகப் போன கறுப்பினத்தவனே,' என்றான் வேட்ச்.

'ஆக, என்னுடைய முகம்தான் எல்லாமே, சீருடை பொருட்டல்ல,' என்றான் புதியவன்.

'எங்களை விடுவிப்பதற்காக நான்கு வருடம் போராடினீர்கள் என நம்புகிறேன்.'

மீண்டும் தந்தையின் குரல் கேட்டது. 'முன் வாசல் வழியாக வீட்டைச் சுற்றிக்கொண்டு போ.'

'சோஷே வெடெல்,' வாய்விட்டுச் சொன்னாள். அம்மா அடுப்படியில் வேலைசெய்யும் ஓசை கேட்டது. 'சோஷே வெடெல்,' சத்தமாகச் சொல்லவில்லை. ஓசையின்றி அவசரமின்றி ஆழமாக மூச்சுவிட்டாள். 'இசையைப் போல இருக்கிறது. பாடுவதைப் போலத் தொனிக்கிறது.'

## III

களஞ்சியத்திற்குப் போகும் வழியில் உட்கார்ந்திருந்தான் கறுப்பினத்தவன். இடிந்து விழுந்த கொட்டில்களில் இரண்டைத் தவிர மற்றவை எல்லாம் காலியாக இருந்தன. அருகே சாக்கு மூட்டை திறந்து கிடந்தது. நடனமாடும் போது அணியும் காலணிகளுக்கு மெருகேற்றிக்கொண்டு இருந்தான். தகர டப்பியின் வாய்ப் பகுதியில் கொஞ்சமே கொஞ்சம் மெருகேற்றும் மெழுகு ஒட்டியிருந்தது. மெருகேற்றப்பட்ட காலணிகளில் ஒன்றின் மேல் பகுதி விரிசல் விட்டிருந்தது. அதன் அடிப்பகுதி சமீபத்தில்தான் ஆணியடித்து சீர்செய்யப்பட்டிருந்தது, பழக்கமற்றவனின் நேர்த்தியற்ற கைவேலை.

'நல்லவேளையாக காலணிகளின் அடிப்பகுதியை யாரும் பார்க்க முடியாது. இவர்களெல்லாம் மலையில் வசிக்கும் கீழ்த்தரமானவர்கள் என்பதற்கு ஆண்டவருக்கு நன்றி சொல். நீ இவற்றை அணிந்திருப்பதை யாங்கிக்கள் பார்ப்பதைக்கூட நான் விரும்பவில்லை.' கண்களை இடுக்கிக் கொண்டு காலணியைப் பார்த்தான், அதன்மேல் ஊதி தேய்த்தான்.

'இந்தா,' என்றபடி கோப்பையை நீட்டினான் வெடெல். அதனுள் ஏதோ நிறமற்ற திரவம் இருந்தது.

கறுப்பினத்தவன் காலணிக்கு மெருகேற்றுவதை நிறுத்தினான்.

'என்ன?' என்றபடி கோப்பையைப் பார்த்தான். 'இது என்ன?'

'இதைக் குடி,' என்றான் வெடெல்.

'தண்ணீர்தானே? எனக்கெதற்கு தண்ணீரைக் கொண்டுவந்தாய்?'

'வாங்கிக் குடி. அது தண்ணீரில்லை.'

யோசனையோடு மெதுவாகக் கோப்பையை வாங்கினான். அதனுள் கசப்பான நைட்ரோ கிளிசரின் மருந்து இருப்பது போன்ற பாவனையில் பிடித்தான், அதை உற்றுப்பார்த்து கண்ணைச் சிமிட்டினான். பிறகு மெல்ல முகர்ந்தான். மீண்டும் கண்ணைச் சிமிட்டியபடி 'இது எங்கே கிடைத்தது?' என்றான். வெடெல் பதில் சொல்லவில்லை. மெருகேற்றி முடித்திருந்த காலணியைக் கையில் எடுத்துப் பார்த்துக்கொண்டு இருந்தான். 'மணம் நன்றாகத்தான் இருக்கிறது,' என்றான். 'ஆனால் இதுவரை இப்படி எதையும் பார்த்ததில்லை. ஒருவேளை நமக்கு விஷம் வைக்கிறார்களோ?'

கோப்பையைச் சாய்த்து மெல்ல சப்பினான். மீண்டும் கண்ணைச் சிமிட்டினான்.

'நான் ஒரு வாய்கூட குடிக்கவில்லை,' என்றபடி காலணியைக் கீழே வைத்தான் வெடெல்.

'குடிக்காமல் விட்டதே நல்லது. இத்தனை வருடமாக உன்னைப் பத்திரமாக வீடு சேர்க்க வேண்டும் என்ற முனைப்போடு இருக்கிறேன். நீயானால் இந்த மனிதர்களின் களஞ்சியத்தில் வீடற்ற நாடோடி போல, தப்பித்து ஓடும் கறுப்பின அடிமை போல, உறங்குகிறாய்."

கண்களை மூடி தலையைச் சாய்த்து ஒரே மடக்கில் விழுங்கி காலிக் கோப்பையை கீழே வைத்தான். 'ஊஹ்ஹ்ஹ.' தலையை வேகமாக ஆட்டினான். 'அதன் வாசமும் செய்யும் வேலையும் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் பார்க்கச் சரியாக இருந்தது என்று சொல்ல மாட்டேன். நீ எப்போதும் போலவே அதைத் தொடாமல் இரு. குடிக்கச் சொல்லி வற்புறுத்தினால் அவர்களை என்னிடம் அனுப்பி வை. உனக்காக ஏற்கெனவே செய்தவற்றோடு இதையும் செய்வதில் எனக்குச் சிரமமொன்றும் இல்லை. எல்லாம் உன் வீட்டினருக்காக.'

மூடைக்குள் எட்டி பார்த்து 'கைத்துப்பாக்கி வேண்டும்' என்றான் வெடெல்.

மெருகேற்றுவதை நிறுத்தினான் கறுப்பினத்தவன்.

எளதற்காக?' மர வீட்டுக்குப் போகும் சாய்வான மண் பாதையை எட்டிப் பார்த்தான். 'இவர்கள் யாங்கிகளா?' என்று கிசுகிசுத்தான்.

'இல்லை,' என்றபடி சாக்கு மூடைக்குள் இருந்த பொருட்களை இடது கையால் கலைத்தான் வெடெல். கறுப்பினத்தவன் அவன் சொன்னதைக் கேட்டதாகத் தெரியவில்லை.

'இது டென்னெஸ்ஸியா? மெம்ஃபிஸ் இருக்கும் டென்னெஸியில் நாம் இருப்பதாகவல்லவா சொன்னாய்? ஆனால் மெம்ஃபிஸ் இப்படி மேடும் இறக்கமுமான நிலப்பரப்பைக் கொண்டது என்பதை சொல்லவே இல்லை. உன் அப்பாவோடு நான் மெம்ஃபிஸ் போன சமயத்தில் இப்படி ஒருவரையும் பார்த்ததே இல்லை. ஆனால் இப்போது மெம்ஃபிஸ் மக்கள் யாங்கிகள் என்கிறாயே?'

'கைத்துப்பாக்கி எங்கே?' என்றான் வெடெல்.

'அப்படிச் செய்யாதே என்று அப்போதே சொன்னேனே? சீசருக்கு அயர்ச்சியாக இருக்குமென்று நீ நடந்து வந்ததை இந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அது போதாது என்று என்னை உட்காரச் செய்து நீ நடந்து வந்தாய். எனக்கு நாற்பது உனக்கு இருபத்தெட்டு என்றாலும் உன்னை விடவும் நான் திடமானவன் என்பது உனக்கும் தெரியும். ஊருக்குப் போனதும் உன் அம்மாவிடம் இதைச் சொல்லப் போகிறேன். எல்லோரிடமும் சொல்லப் போகிறேன்.'

கைத்துப்பாக்கியைத் தேடி எடுத்துக்கொண்டு எழுந்தான் வெடெல்.

அதை ஒற்றைக் கையில் பிடித்தபடி விசையை இழுத்துப் பார்த்தான். யூனியன் படையின் நீல நிறச் சீருடை அணிந்த கறுப்பினத்தவன் வாலில்லா குரங்கைப் போலக் குத்த வைத்து உட்கார்ந்து அவனையே பார்த்தான்.

'அதைக் கீழே வை. போர் முடிந்துவிட்டது. ஃபெர்கின்னியிலேயே சொன்னார்களே. இனி கைத்துப்பாக்கி தேவையில்லை. கீழே வை. நான் சொல்வது கேட்கிறதா?'

'குளிக்கப் போகிறேன். என்னுடைய சட்டை...' என்றான் வெடெல்.

'எங்கே குளிக்கப் போகிறாய்? எதில்? இவர்கள் குளியல் தொட்டியைப் பார்த்திருக்கவே வாய்ப்பில்லை.'

'கிணற்றடியில் குளிக்கிறேன். சட்டை தயாராக இருக்கிறதா?'

'துப்பாக்கியைக் கீழே வையுங்கள், எஜமானர் சோஷே. உன்னைப் பற்றி அம்மாவிடம் நிச்சயம் சொல்லப் போகிறேன். எல்லோரிடமும் சொல்லப் போகிறேன். எஜமானர் இப்போது இங்கே இருந்தால் நல்லது எனத் தோன்றுகிறது.'

'சமையலறைக்குப் போய் கிணற்றடியில் குளிக்க வேண்டும் என்பதைச் சொல். அந்த ஜன்னலை மூடச் சொல்.' கைத்துப்பாக்கியைச் சாம்பல் நிற மேலங்கிக்குள் ஒளித்தான். உயர் ரகக் குதிரை நின்ற கொட்டிலுக்கு சென்றான்.

குதிரை அவனை மூக்கால் முட்டியது, மென்மையாகப் பார்த்தது. அதை இடது கையினால் தட்டிக் கொடுத்தான், அதிக ஓசை எழுப்பாமல் கனைத்தது. அதன் சுவாசம் இனிமையும் வெப்பமும் கலந்ததாக இருந்தது.

# IV

பின்பக்கம் வழியாகச் சமையலறைக்குள் நுழைந்தான் கறுப்பினத்தவன். முக்காடைக் கழற்றிவிட்டு நீல நிறத் தொப்பியை அணிந்திருந்தான். அளவு பெரியதாக இருந்ததால் அவன் தலைக்குப் பொருந்தவே இல்லை. அதன் முன்புற மடிப்பு வெளியே நீண்டு தனக்கெனத் தனி உயிர் இருப்பது போல அப்படியும் இப்படியும் அசைந்தது. அவன் உருவம் கண்ணுக்குப் புலப்படவே இல்லை, முகம் மாத்திரம் சாம்பல் படர்ந்த மண்டை ஓடு போல இருந்தது. வயதில் மூத்த பெண்மணி அடுப்படியில் எதையோ வறுக்கும் ஓசை கேட்டது. கறுப்பினத்தவன் உள்ளே நுழைந்ததை அவள் கவனிக்கவில்லை. இளையவள் அறையின் நடுவில் சும்மா நின்றாள். சமையலறைக்குள் நுழைந்தவனைக் கண்சிமிட்டாமல் குறுகுறுப்போடு பார்த்தாள். பயமே இல்லாமல் அறையின் குறுக்கே நடந்து போய் மரத்துண்டு ஒன்றை இழுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

'வருடம் முழுவதும் இந்தப் பகுதியில் வானிலை இப்படித்தான் இருக்குமா? அப்படியென்றால் யாங்கிகளே இந்த நிலத்தை வைத்துக்கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை,' என்றபடியே மேலங்கியைக் கழற்றினான். அவன் கால்களும் பாதங்களும் அளவில் பெரிதாக வடிவமே இன்றி இருப்பதைக் கவனித்தாள். சேறு படிந்த ரோமம் அடர்ந்த ஏதோ ஒன்றால் போர்த்தப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு இரண்டு நாய்கள் தரையில் படுத்திருப்பதைப் போல இருந்தது. அருகே சென்றதும் மேலங்கியில் இருந்து வெட்டி எடுத்த துண்டுகளால் காலைச் சுற்றிக் கட்டியிருப்பது தெரிந்தது. 'போதும் ஐயா. என்னை என்னுடைய ஊருக்குப் போகவிடுங்கள். மற்றதை எல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்,' என்றான்.

'உங்கள் ஊர் எது?' எனக் கேட் டாள்.

'மிஸ்ஸிஸிப்பி. கவுண்டிமேய்ஸன் என்று கேள்விப்பட்டு இருக்கிறாயா?'

'கவுண்டிமேய்ஸனா?'

'அதேதான். அவனுடைய தாத்தா தான் அந்தப் பெயரை வைத்தவர். ஒரு மாவட்டத்தை விடவும் பெரியது. எளிதில் கடந்துபோக முடியாத பரப்பளவு கொண்டது. காலையில் கோவேறு கழுதையின்மீது ஏறி பயணம் செய்தாலும் மாலைக்குள் கடந்துவிட முடியாது, அத்தனை பெரியது.' கைகளால் மெல்ல தொடையைத் தேய்த்தபடி முகத்தைத் திருப்பி அடுப்பைப் பார்த்து ஊதினான். ஏற்கெனவே சாம்பல் நிறத்தில் இருந்த முகம் இப்போது கறுப்பு நிறமானது. ஓயாத பயன்பாட்டினால் வாயைச் சுற்றிலும் இருந்த தசை தளர்ந்துபோன இரப்பர் பேண்டைப் போலத் தொங்கியது. சாப்பிட உதவும் தசை அல்ல, பேசப் பயன்படுபவை. 'ஒரு வழியாக வீடு திரும்பிவிடுவோம் என்று நினைக்கிறேன். இனி எங்கள் ஊர் பன்றி இறைச்சியின் மணத்தை சுவாசிக்கலாம்.'

'கவுண்டிமேய்ஸன்' ஆச்சரியத்தோடு பெயரை உச்சரித்தாள் இளைய பெண். கறுப்பினத்தவனைக் கண்ணைச் சிமிட்டாமல் தீவிரமாகப் பார்த்தாள். பிறகு தலையைத் திருப்பி சுவரைப் பார்த்தவளின் முகம் சலனமற்று இருந்தது. அதில் தோன்றிய உணர்ச்சிகளை இனம்காண முடியவில்லை. அவசரம் ஏதுமின்றி நிதானமாகவும் தீர்க்கமாகவும் யோசனை செய்தாள்.

'அதேதான்,' என்றான். 'கவுண்டிமேய்ஸனைப் பற்றியும் எஜமானர் பிரான்சிஸ் வெடெலைப் பற்றியும் யாங்கிகளுக்குகூடத் தெரியும். பிரதமர் மக்களை நடத்தும்விதம் பிடிக்கவில்லை என்பதை அவரிடமே நேரில் சொல்வதற்காக வாஷிங்டனுக்குச் செல்லும் வழியில் இந்த ஊரைக் கடந்து சென்றார். அப்போது அவரை நீங்கள் பார்த்திருக்கலாம். குதிரை வண்டியிலேயே வாஷிங்டன் வரையில் சென்றார். வண்டி ஓட்டவும் கால்களுக்கு வெப்பம் தர செங்கற்களைச் சூடேற்றவும் உதவிக்காக இரண்டு கறுப்பினத்தவர்கள் மட்டும் தான் உடன் வந்தார்கள். புதிய குதிரைகளை வண்டியில் பூட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார் அந்த மனிதர். முழுதாகத் தோலுரித்த இரண்டு கொழுத்த கரடிகளின் இறைச்சியையும் புகையில் வாட்டிய எட்டு மான்களின் கறியையும் பிரதமருக்குப் பரிசாக எடுத்துச் சென்றார். உங்கள் வீடு இருக்கும் பாதை வழியாகத்தான் போயிருப்பார். உன் அப்பாவோ அவருடைய அப்பாவோ எஜமானரைப் பார்த்திருக்கலாம்.'

தங்குதடையின்றி சரளமாகப் பேசிக்கொண்டே இருந்தான். கேட்பதற்குத் தாலாட்டைப் போல இருந்தது. அறையின் வெப்பத்தில் அவன் முகம் பளபளத்தது. தாய் அடுப்படியில் வேலையாக இருந்தார், மகளோ வெறுங்கால்களை மரத்துண்டின் மீது அழுத்தியபடி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். ஏதோ ஓர் உயிரினத்தின் தோலாலான மேலங்கியால் உடலைப் போர்த்தி இருந்தாள். கண்சிமிட்டாமல் வாயைப் பிளந்தபடி கறுப்பினத்தவனைப் பார்த்தாள்.

அவனோ கண்களை மூடியபடி முடிவேயில்லாமல் பெருமை பீற்றினான். இன்னும் சொந்த ஊரில் இருப்பது போலவும் போர் என்ற ஒன்று நடக்கவே நடக்காதது போலவும் விடுதலை, மாற்றம் போன்றவை குறித்த வதந்திகள் எதுவும் உலவாதது போலவும் நடந்துகொண்டான். குதிரையைப் பராமரிக்கும் எளிய பணியாளனான அவன், மாலை நேரத்தில் மற்ற பணியாளர்களுடன் கதைபேசி நேரத்தைக் கழிக்கிறோம் என நினைத்துக்கொண்டானோ? மூத்த பெண்மணி உணவோடு வெளியே செல்லும் ஓசை கேட்டு கண்ணைத் திறந்தவன் கதவைப் பார்த்துவிட்டு இளம்பெண்ணையும் பார்த்தான். சுவரையும் தாய் மூடிவிட்டுச் சென்ற கதவையும் பார்த்துக்கொண்டு இருந்தவளிடம் 'அவர்களோடு சேர்ந்து உணவருந்த உனக்கு அனுமதி இல்லையா?' என்றான்.

அவளோ கண்கொட்டாமல் அவனைப் பார்த்து, 'கவுண்டிமேய்ஸனா? அவனும் கறுப்பினத்தவன்தான் என்று வேட்ச் சொல்கிறானே,' என்றாள்.

'யார்? அவனா? கறுப்பினத்தவனா? எஜமானர் சோஷே வெடெல்லா? இவர்களில் யார் வேட்ச்?' என்றான். 'நீங்கள் யாரும் இதுவரையில் எங்கேயும் போனதில்லை, எதையும் பார்த்ததில்லை என்பதால் ஏற்பட்ட குழப்பம் இது. இந்தப் பொட்டல் மலையில் உட்கார்ந்திருக்கும் உங்களால் புகையைக்கூடப் பார்க்க முடியாது. அவனா கறுப்பினத்தவன்? நீ சொன்னதை மாத்திரம் அவனுடைய அம்மா கேட்டிருக்க வேண்டும்,' என்றபடி சமையலறையை நோட்டமிட்டான். சுருக்கம் விழுந்த கண்களின் வெள்ளை முழி இப்படியும் அப்படியும் நிற்காமல் சுழன்றது. இளம் பெண் அவனையே பார்த்தாள்.

**வண்டி ஓட்டவும் கால்களுக்கு வெப்பம் தர செங்கற்களைச் சூடேற்றவும் உதவிக்காக இரண்டு கறுப்பினத்தவர்கள் மட்டும் தான் உடன் வந்தார்கள். புதிய குதிரைகளை வண்டியில் பூட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார் அந்த மனிதர்**

(தொடரும்)



பாலசுப்ரமணியம்

# சிறுதானியங்களின் பலம்

நண்பர் ஒருவர், 'இந்த வார இறுதியில் அட்டிஸ் போலாமா?' என்றொரு செய்தியை அனுப்பியிருந்தார். ‘அட்டிஸ்’ என்பது தான்சானியாவின் டார் எஸ் ஸலாம் பகுதியில் அமைந்துள்ள எத்தியோப்பிய உணவகம். எத்தியோப்பியாவின் தலைநகரான அட்டிஸ் அபாபா என்னும் பெயரின் சுருக்கம். உடனே ஒப்புக்கொண்டேன்.

எத்தியோப்பிய உணவில் மிக முக்கியமானது ‘இஞ்சிரா’ என்னும் உணவு வகை. தோசைக்கும், அப்பத்துக்கும் பிறந்த கலப்பு உணவு எனச் சொல்லலாம். தொழில் நிமித்தமாக அட்டிஸ் அபாபா செல்லும்போதெல்லாம் உண்ணும் உணவு இது.

**ஆப்பிரிக்காவுக்கு ஏற்ற பயிர்**

இஞ்சிராவைத் தயாரிக்கப் பயன்படும் சிறுதானியத்தை ஆங்கிலத்தில் ‘டெஃப்’ என அழைக்கிறார்கள். எத்தியோப்பியாவில் தோன்றிய இந்தச் சிறுதானியம், உண்மையிலேயே மிக மிகச் சிறிய தானியம். கடுகைவிடச் சிறியது. ஆனால், இதிலுள்ள புரதச் சத்துகளும் கனிமச் சத்துக்களும் மற்ற தானியங்களை ஒப்பிடுகையில் அதிகம். உலகில் கணிசமான மக்களுக்கு கோதுமை உள்ளிட்ட பல தானியங்களில் உள்ள க்ளூட்டென் ஒவ்வாமை உண்டு. இதில் க்ளூட்டென் இல்லை என்பதால், அவர்களுக்கு இது ஒரு பெரும் வரப்பிரசாதம். உலகச் சந்தைகளில், டெஃப் கிலோ சுமார் ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்கிறது.

வறட்சியைத் தாங்கி வளரும் சக்தி கொண்ட டெஃப் தானியமானது, ஆப்பிரிக்கா போன்ற பாசன நீர்க் கட்டமைப்பு வசதியில்லா கண்டத்துக்கு மிகவும் ஏற்ற பயிர். ராகி, கம்பு, சோளம், சாமை வரகுபோல.

உணவில் அதிக மாமிசமும், டெஃப்பால் செய்யப்பட்ட இஞ்சிராவும் உண்ணுவதால், எங்களில் உடல் பருமன் கொண்டவர்களை அதிகம் பார்க்க முடியாது என்பார்கள் எத்தியோப்பியர்கள். அது ஓரளவு உண்மைதான். எத்தியோப்பியர்கள் ஒல்லியாக உயரமாக, மற்ற ஆப்பிரிக்கர்களிடம் இருந்து மாறுபட்ட தோற்றத்தில் இருப் பார்கள். உடல் பருமன் கொண்டவர்களை அங்கே நான் அதிகம் கண்டதில்லை.

அட்டிஸ் உணவகம் ஒரு பழங்கால வீட்டின் முதல் தளத்தில், எத்தியோப்பியக் கலைப் பொருட்களுடன் அலங்கரிக்கப்பட்டு மிக அழகாக இருந்தது. தொடக்க உணவாக, ரோஸ்ட்டட் இஞ்சிராவை ஆர்டர் செய்தோம். தோசைபோல பெரிபெரி (மிளகாய் சாஸ்) தடவி மிகச் சுவையாக இருந்தது. ஆனால், அதைச் சாப்பிட்டு முடிப்பதற்குள்ளாகவே வயிறு நிறைந்துவிட்டது. பின்னர் வந்த இஞ்சிராவுடன் கூடிய காளானைக் கொஞ்சம் மட்டும் சாப்பிட்டுவிட்டு, பொதியாக்கி வாங்கிக்கொண்டோம்.

**இக்ரிசாட்**

திரும்ப வீட்டுக்கு வருகையில், அண்மையில் இந்தியாவின் ஹைதராபாத் நகரத்தில் உள்ள வறண்ட வெப்ப மண்டலத்துக்கான பன்னாட்டுப் பயிர் ஆராய்ச்சி நிறுவனம் International Crop Research Centre for Semi-arid Tropics - **ICRISAT** - இக்ரிசாட்) வெளியிட்டிருந்த ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை நினைவுக்கு வந்தது. அனிதா என்னும் மூத்த ஆராய்ச்சியாளர், நான்கு நாடுகளில் நடந்த எட்டு பரிசோதனைகளை ஒன்றிணைத்து வெளியிட்டிருந்த ஆராய்ச்சி முடிவுகள் பெரும் வியப்பை ஏற்படுத்துகின்றன. இந்த ஆராய்ச்சிகள் சிறுகுழந்தைகள், முன்பள்ளி செல்லும் குழந்தைகள், மற்றும் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளிடையே, 3 மாதம் முதல் 4.5 ஆண்டுகள் வரை நடத்தப்பட்டவை.

இந்தப் பரிசோதனைகளில், ராகி, சோளம், சிறுதானியக் கலவை (ராகி, கம்பு, குதிரைவாலி, கோடோ தானியம்) கொண்ட உணவுகளை உண்ட குழந்தைகளின் வளர்ச்சி, அரிசியை உணவாக உண்ட குழந்தைகளுடன் ஒப்பிடப்பட்டது. அரிசி உணவை உண்ட மாணவர்களைவிட, சிறுதானிய உணவை உண்ட மாணவர்களின், சராசரி உயரம் 28.2%, எடை 26%, புஜத்தின் சுற்றளவு 39%, மார்பளவு 37% அதிகரித்திருந்தன என அந்த ஆராய்ச்சி முடிவுகள் சொல்கின்றன.

ஆனால், இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளின் வேளாண் கொள்கைகள் கடந்த 70 ஆண்டுகளாக, நெல் மற்றும் அரசி உணவுகளைச் சார்ந்தே உள்ளன. நாடு விடுதலை பெற்ற காலத்தில், இருந்த உணவுப் பற்றாக்குறையை நீக்க, உடனடியாக அதிக உணவு உற்பத்தி, அதற்கான பாசனக் கட்டமைப்புகள், அரசுக் கொள்முதல் என ஏற்படுத்தி முதல் 20 ஆண்டுகளில் நெல் உற்பத்தியில் கணிசமான உயர்வைக் கண்டோம். ஆனால், அதையே அடுத்த 50 ஆண்டுகளாக எந்த மீளாய்வும் செய்யாமல் தொடர்ந்துகொண்டிருப்பது சரியானதாகத் தெரியவில்லை.

நெல் உற்பத்திக்கு உர மானியம் அடங்கலாக அரசு பெருமளவு பணத்தைச் செலவிடுகிறது. ஆனால் அதேயளவு ஊக்கமும் ஆதரவும் சிறுதானிய உற்பத்திக்குக் கிடைப்பதில்லை. உணவு தானியங்களில், மிக அதிக நீரைக் கோருவதும், மிகக் குறைவான ஊட்டச்சத்து கொண்டதுமான தானியம் நெல்தான். எனவே, வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்புக் கொள்கைகளை அரசு மீளாய்வுக்குள்ளாக்க வேண்டியது உடனடித் தேவை.

**தமிழ்நாடு செய்வது என்ன?**

தமிழ்நாட்டில், இந்த ஆண்டு நிதி அறிக்கையில், சிறுதானிய

**சிறுதானியங்களின் ...**

உற்பத்திக்கெனத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டத்திலும் சிறுதானிய உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்படும் என அறிவித்திருக்கிறது மாநில அரசு.

இது தமிழ்நாட்டின் உணவுப் பண்பாட்டில் எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் சிறுவர்களின் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்திலும் முக்கியமான மாற்றத்தைக் காட்டும் என்று எதிர்பார்க்கலாம். சிறுதானிய உற்பத்தி அதிகரிக்கும் போது மக்களுக்கும் ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருட்கள் கிடைப்பது அதிகரிக்கும். ராகி, கம்பு போன்றவை மிகக் குறைவான நீர்த் தேவை கொண்டவை.

இன்று நாம், சத்தான உணவை உற்பத்தி செய்தல், உழவர்களுக்கான சரியான கொள்முதல் விலையைக் கொடுத்தல், வேளாண்மைக்கான நீர்ச் செலவைக் குறைத்தல் போன்ற அடுத்த நிலைக் குறிக்கோள்களை நோக்கி நகர வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

**சித்திரா**



# குழந்தைகளைப் பேச வைப்பதில் கவனமெடுப்போம்!

கடந்த இரு ஆண்டுகளாக, உலகெங்கும் உள்ள மக்களின் பொருளாதாரத்தையும், சமூக உறவுகளையும் கொரோனா தீநுண்மி கடுமையாகப் பாதித்துள்ளது. குறிப்பாக, மழலையர் பள்ளிகள் நீண்டகாலமாக மூடப்பட்டு, அண்மையில்தான் திறக்கப்பட்டுள்ளன. அதனால், குழந்தைகளிடம் இனம் தெரியாத கவலையும், பயமும் இன்னும் காணப்படுகின்றன. அதனால், அவர்களுக்குத் தேவையான மனநல ஆலோசனைகளை அளிப்பதில் சில பள்ளி ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆலோசனைகள் வெற்றிகரமாக குழந்தைகளை சென்றடைய, குழந்தைகள் மனம் விட்டு பேச வேண்டும். இந்த சிக்கலான நிலையில் குழந்தைகளின் பேசும் திறன் மட்டுமே, அவர்கள் எதிர் நோக்கியுள்ள சவால்களிலிருந்து அவர்களை மீட்டெடுக்க உதவும். நமது கல்வி முறையின் அடித்தளம் இவர்கள். இன்றைய குழந்தைகளின் எதிர்காலம்தான் நம் நாட்டின் எதிர்காலம் என்பதால் அவர்கள் முன்னுரிமை கொடுத்துக் கவனிக்கபடவேண்டிய வர்கள்.

ஆனால், சமுதாயத்தில் கூட்டுக் குடும்ப முறை ஏறத்தாழ மறைந்துவிட்ட நிலையில், வீட்டுக்கொரு குழந்தை என்ற நிலை உருவாகி வருகிறது. தனிக் குடும்ப வாழ்க்கை அமைப்பில், கணவன் - மனைவி இருவரும் பணிக்கு செல்ல நேரிடுவதால், அவர்கள் குழந்தைகளுடன் செலவிடும் நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால், குழந்தைகள் அவர்களுடன் பேசுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைந்து போகிறது.

எனவே, இவ்வகை குழந்தைகள் பேச வெகு நாட்களாகின்றன. பெரும்பாலும் தனித்தே இருக்கும் இக்குழந்தைகளுடன் பேச எவருமில்லாத காரணத்தால் பேசத்தொடங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது. இது பெற்றோ ருக்கு கவலையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது. இது ஒரு சமூக பிரச்னையாக மாறிவருகிறது.

குழந்தைகள் பேசுவது அவர்களின் மரபுவழி, வளரும் சூழல்களுக்கேற்ப மாறுபடுகின்றது. மூன்று வயது முடிந்தும் பேசாத குழந்தைகளை உடனடியாக பேச்சு சிகிச்சை தருபவரிடம் கூட்டிச் சென்று அதற்கான காரணங்களை கண்டறிவது நல்லது. பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு பேசுவதில் தாமதம் ஏற்படலாம். அவர்களுக்கு உடனடிசிகிச்சை தேவை.

பெற்றோர்கள் தமது குழந்தைகளின் மழலைப் பேச்சில் மயங்கிப் போகும் காலங்கள் மிகவும் இனிமையானவை. தாய் பேசும்போது அவரின் உதட்டசைவுகளைக் கூர்ந்து கவனித்து குழந்தைகள் பேச முற்படுகின்றனர்.

இந்த நிலையில் குழந்தைகள் தமது தாய்மொழியைக் கற்பதற்கு அவர்களின் அன்னையின் பங்கும் தந்தையின் பங்கும் மிகவும் முக்கியமானவை. எனவே அவர்கள் கணிசமான நேரத்தை குழந்தைகளுடன் செலவிட்டு அவர்கள் பேசுவதற்கான தீவிர முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எப்போதும் வேலை வேலை என்று இருக்கும் பெற்றோரின் குழந்தைகள், ஒற்றைப்பெற்றோரால் வளர்க்கப்படும் குழந்தைகள், அன்றாடம் குடும்பப் பூசல்களிடையே வளரும் குழந்தைகள் ஆகியோர் பேச வெகு நாட்களாகும். எந்தவிதக் காரணமாக இருந்தாலும், நம்மால் நிச்சயம் குழந்தைகளைப் பேச வைக்க முடியும்.

குழந்தைகள் பேசுவதற்கான சூழலை முதலில் பெற்றோர் குடும்பத்தில் ஏற்படுத்தித் தரவேண்டும். குழந்தையை அனைவருடனும் பழக விடுவதன் மூலம் பெற்றோர் முயற்சியில்லாமலே அவர்களை பேச வைத்திட முடியும். மற்ற குழந்தைகளுடன் சுதந்திரமாக விளையாடும்போது அவர்களுக்கு பேச்சு தானாகவே வரும். இவ்வாறு செய்வதால் குழந்தைகள் மற்றவர்களிடம் பேசுவதற்கான தேவையை ஏற்படுத்த முடியும்.

யாரேனும் பேசும்போதுதான் குழந்தைகள் அதைப் பார்த்து பேச கற்றுக் கொள்ள முடியும். குழந்தைகளுக்கு என்ன புரியப் போகின்றது என்று எண்ணி விடாதீர்கள். நீங்கள் என்ன கேட்டாலும், அவர்கள் அதற்கு பதில் அளிக்க முயல்வார்கள்.

நம் வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளின் பெயரையும் சுட்டிக்காட்டி குழந்தைகளுக்கு பேசக் கற்று கொடுப்பது நல்ல தொடக்கமாக அமையும். அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா போன்ற குடும்ப உறவு முறைகளையும் எப்போதும் கூறி, அவர்களையும் சொல்ல வைக்கலாம். இதுவே குழந்தையை பேச வைக்க சிறந்த வழியாகும்.

இரவு நேரத்தில் படுக்கைக்கு செல்லும்போது கதைகளை சொல்லி தூங்க வைக்கலாம். இதுவும் குழந்தையின் பேச்சுத்திறனை முன்னேற்றும். இதனால் உடனடி வேறுபாட்டைக் காண முடியாது. என்றாலும் உங்களுக்கு அவர்கள் பேசுவதில் மனநிறைவு கிடைக்கும் வரை முயற்சி செய்வதை விட்டு விடாதீர்கள். ஆடு, மாடு, நாய், பறவைகள் ஆகியவற்றின் சத்தத்தை அவர்களுக்கு சொல்லிக் காட்டுங்கள்.

எளிய குழந்தைப் பாடல்களை, குழந்தைகள் சாப்பிடும்போது பாடிக் காட்டலாம். இதை திரும்பத் திரும்பக் கேட்கும்போது அவர்களும் ஒரு நாள் அதைப் பாடுவார்கள். அவர்கள் கேட்டு திரும்பச் சொல்லும் வரை பொறுமையுடன் காத்திருங்கள். அவர்கள் ஒரு நாள் நிச்சயம் சொல்லுவார்கள். குழந்தைகளை பேச வைக்க இதுவும் ஒரு வழியாகும். வெறும் பேச்சு மட்டும் போதாது. அவர்களையும் மீண்டும் மீண்டும் சொல்லச் சொல்லுங்கள்.

சிறிய வார்த்தைகளை சொல்லிக் கொண்டே இருங்கள். அது அக்குழந்தையின் பெயராகக் கூட இருக்கலாம். அந்தப் பெயரை இரவு நேர கதைகளில் பயன்படுத்தலாம். இதையெல்லாம் கேட்கும் குழந்தைகள் வெகு சீக்கிரம் பேசி விடுவார்கள். நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தியும் அவர்களை விரைந்து பேசச் செய்ய நம்மால் முடியும்.

குழந்தைகள்தான் நமது எதிர்கால நம்பிக்கை. அவர்களின் மொழித்திறனும், பேச்சுத்திறனும் அவர்களின் ஆளுமைக்கு மேலும் மெருகு சேர்க்கும். அவர்களை வழிநடத்த வேண்டிய கடமை பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் உள்ளது. நல்ல பேச்சாற்றல் பெறுவது, பின்னாளில் அவர்கள் தங்கள் சொந்த வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காண உதவும். அதனால் நல்ல சமுதாயம் உருவாகும். எனவே இனியாவது குழந்தைகள் சுதந்திரமாக பேசுவதற்கு நாம் உதவிடுவோம்.

# சத்தமின்றி சாதனை படைத்த கியூபா



திி.ஜெயராஜ்

கியூபா நாட்டில் பாடிஸ்டாவின் படைத்துறை சர்வாதிகாரத்தை 1958ஆம் ஆண்டு பிடல் காஸ்ட்ரோ தூக்கியெறிந்தபோது ஏற்பட்ட புரட்சிக்குப் பின் தற்போது அமைதியான மருத்துவப் புரட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் கியூபாவின் உயிரி தொழில்நுட்பத் துறை, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ உதவி தேவைப்படும் நாடுகளுக்கு மருத்துவர்களை அனுப்பும் மருத்துவ பன்னாட்டியம் போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி இந்த மருத்துவப் புரட்சிக்கு வித்திட்டது.

கொவிட்-19 பெருந்தொற்றினை எதிர்த்துப் போராட ஐந்து தடுப்பூசிகளை உருவாக்கிய கியூபா, அந்த நாட்டின் மக்கள் எண்ணிக்கையில் 93 சதவீதத்தினருக்கு அத்தடுப்பூசிகளை வழங்கி ஓர் இணையற்ற சாதனையினை நிகழ்த்தியுள்ளது. ஃபைசர் மற்றும் மாடர்னா போன்ற புதிய மற்றும் விலையுயர்ந்த தூதனரி (எம்ஆர்என்ஏ) தடுப்பூசிகளின் மேல் கவனம் செலுத்திய உலகம் கியூபாவின் இச்சாதனையினை கவனிக்கவில்லை.

இச்சாதனைக்கு காரணமான கியூபா மரபணு பொறியியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் மற்றும் ஃபின்லே இன்ஸ்டிடியூட் ஆஃப் வக்சின்ஸ் ஆகியவற்றின் செயல்பாடுகளை ‘நேச்சர்’ என்ற அறிவியல் இதழ் வெளியிட்டது.

உலகின் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் தங்கள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக பணக்கார நாடுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் சூழலில் அறுபது ஆண்டுகளாக அமெரிக்காவின் வாத்தகத் தடையினால் மெருகூட்டப்பட்ட கியூபா கொரோனா தீநுண்மியினால் பாதிக்கப்பட்ட கரீபியன் தீவு மக்கள் மீண்டு வர தடுப்பூசிகளை அனுப்பியது. ஃபைசர் மற்றும் மாடர்னா போன்ற தடுப்பூசிகளைப் பற்றி கிட்டத்தட்ட அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்ட சூழலில் 2021ஆம் ஆண்டில் கியூபா உலகின் சில நாடுகளுக்கு தடுப்பூசிகளை அனுப்பிய செய்தியினை ‘ஹவானாவில் இருந்து வெளிவரும் நல்ல செய்தி’ என்ற தலைப்பில் இரண்டு செய்தி நிறுவனங்கள் மட்டுமே வெளியிட்டன.

கொவிட்-19 பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் உருவான அவசர நிலை காரணமாக

**உலகின் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் தங்கள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக பணக்கார நாடுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் சூழலில் அறுபது ஆண்டுகளாக அமெரிக்காவின் வாத்தகத் தடையினால் மெருகூட்டப் பட்ட கியூபா கொரோனா தீநுண்மியினால் பாதிக்கப்பட்ட கரீபியன் தீவு மக்கள் மீண்டு வர தடுப்பூசிகளை அனுப்பியது.**



கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு இடையிலும் தங்கள் நாட்டு வளங்களையும் ஆராய்ச்சி திறனையும் மட்டுமே கொண்டு சொந்தத் தடுப்பூசிகளை உருவாக்க வேண்டும் என்ற உறுதியினை கியூபா எடுத்தது. ஓராண்டு கால முயற்சியின் விளைவாக 1.13 கோடி மக்கள் எண்ணிக்கை கொண்ட கியூபா ஐந்து தடுப்பூசிகளை உருவாக்கியது. இந்த ஐந்தில் நான்கு தடுப்பூசிகள் கொரோனா தீநுண்மிக்கு எதிராக 90 சதவீத பாதுகாப்பை வழங்குவதாக அந்நாடு கூறுகிறது.

2022ஆம் ஆண்டு தை மாதம் 20ஆம் நாள் நிலவரப்படி, கியூபாவில் 86.54 சதவீதம் பேர் முழுமையாக மூன்று தவணை தடுப்பூசிகளை எடுத்துள்ளனர் என்றும் மேலும் 7 சதவீதம் பேருக்கு ஒன்று அல்லது இரண்டு தவணை தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது என்றும் ‘அவர் வேர்ல்ட் இன் டேட்டா’ என்ற அறிவியல் இணையதளம் தெரிவித்துள்ளது. ஒரு சின்னஞ்சிறிய நாடு சொந்த தடுப்பூசிகளைத் தானே தயாரித்து அதன் மக்கள் எண்ணிக்கையில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு போடுவது ஒரு நடைமுறைச் சாத்தியங்களில் அரிதானது என்றும் இது ஒரு நம்ப முடியாத சாதனை என்றும் கிளாஸ்கோ மற்றும் டல்ஹவுசி பல்கலைக்கழகங்களின் கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மிகவும் முன்னேறிய பணக்கார நாடுகள்கூட உயிரி தொழில்நுட்பத் துறையின் சாத்தியக்கூறுகள் குறித்து அறியாத மற்றும் புரியாத 1980ஆம் ஆண்டு காலகட்டத்தில் காஸ்ட்ரோ இத்துறையில் யாரும் நம்பமுடியாத அளவில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்தார். அறிவுசார் சொத்துரிமை மூலம் தங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குத் தடைகள் ஏற்படாத வகையில் உயிரி தொழில்நுட்ப அறிவியலை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருந்த



# "கொழும்பட்ட கிரி அப்பிட்ட கெக்கரி"

நியூட்டன்

நெருக்கடிமிக்க பொருளாதார நிலைமைக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் இலங்கையின் அடுத்த தலைவர் யார் என்பதில் அதிகம் குழப்பமான சூழலே காணப்படுகிறது. 'கோத்தா கோ ஹோம்' என்பது ஆங்கிலச் சுலோகமாக இருக்கிறதே தவிர அது சிங்கள மொழியில் 'கோத்தா கெதரட்ட யன்ன' என்று பெரும்பான்மைச் சிங்களவர்களால் உச்சரிக்கப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆங்கிலம் கற்காத பெரும்பான்மைச் சிங்கள மக்கள் கொழும்பை மையப்படுத்தி வாழும் ஆங்கிலம் கற்ற தரப்பினரைக் கடுவா (வாள்) என்றே கூறுவர். வெள்ளைக்காரனுடன் சேர்ந்து நின்று ஆங்கிலத்தில் கதைத்துப் புழங்கிச் சாதாரண சிங்கள மக்களைக் கழித்துவிட்ட அல்லது வெட்டிவிட்ட கூட்டம் என்பதே அதன் அர்த்தம். இதைவிட மிக நீண்ட காலமாகவே 'கொழும்பட்ட கிரி அப்பிட்ட கெக்கரி'' என்ற முதுமொழி ஒன்றும் கிராமத்துச் சிங்களவரின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. அதாவது தாயின் முலைப்பாலைக் கொழும்பில் உள்ளவர்கள் முழுமையாக உறிஞ்சிக் குடித்தபின் பாலில்லாத வெறும் முலையைக் கெக்கரிக்காயைச் சூப்புவதுபோல எம்மைச் சூப்ப விட்டிருக்கிறார்கள் என்பதைப் பொருளாதார அர்த்தத்தில் கூறுவர். அதாவது நல்லவை எல்லாவற்றையும் கொழும்பில் உள்ளவர்கள் எடுத்துவிடுவர் என்பதே அதன் அர்த்தம். அந்தக் கொழும்பு வர்க்கம் தான் இன்று பெருமெடுப்பில் போராடியும் வருகிறது.

**யார் தலைவர்...?**

'கோத்தா கோ ஹோம்' வேலைத்திட்டத்தில் காலி முகத்திடலில் முகாமிட்டுள்ளவர்கள் எந்த ஒருவரையும் தலைவராக திருநிலைப்படுத்தவில்லை. இது இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவருக்குப் போராட்டத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. காலிமுகத்திடலில் முகாமிட்டுள்ளவர்களை நோக்கி இதுவரை எந்தச் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்களும் செல்லவில்லை. போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களும் யாரையும் அழைக்கவும் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதே அவர்களின் முக்கிய கோரிக்கையாகும்.

நிலமை இவ்வாறிருக்க பாத யாத்திரை, வழிமறிப்பு, உருவப் பொம்மைகளை எரிப்பது, சவப்பெட்டி ஊர்வலம், காகம்போல வேடமிட்டு ஆடுவது, ஒப்பாரி, தொய்ல் நடனம், தெருக்கூத்து, எனப் பல்வேறு வகையான அரச எதிர்ப்புப் போராட்டங்கள் அதற்கெதிரான கண்ணீர்ப்புகை துப்பாக்கிச் சூடு என நடந்து அரசுக்கு எதிரான போராட்டத்தில் ரம்புக்கனையில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

**எம்மிடம் தாருங்கள்**

இடைக்கால அரசு ஒன்று அமையுமாக இருந்தால் அதிலும் நானே தலைமை அமைச்சர் - என்கிறார் மகிந்த ராஜபக்ச. இளைஞர்கள் விரும்பினால் நான் தலைமை அமைச்சர் பதவியை ஏற்கத் தயார் - என்கிறார் ரணில். அரசை நடத்த முடியாவிட்டால் என்னிடம் கையளித்துவிட்டு வீட்டுக்குப் போங்கள் - என்கிறார் சஜித். தமிழரிடம் தலைமைப் பதவியை வழங்கினால் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை இலகுவாகத் தீர்க்க முடியும் - என்கிறார் செல்வம் அடைக்கலநாதன். வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பணம் கொடுத்து வாங்கும் வல்லமை புலம்பெயர் தமிழருக்குண்டு அதைச் செய்தால் இலங்கையின் பொருளாதாரத்தை விரைவில் சீர்செய்ய முடியும் - என்கிறார் விக்னேஸ்வரன்.

**மகிந்தவின் கோரிக்கை**

மகிந்த ராஜபக்சவையும் அரச தலைவர் கோத்தாபயவையும் பதவி விலகுமாறு கோரிய பின்னரும் மகிந்த ராஜபக்ச இனிமேலும் தானே பிரதமர் என்று தன்னளவில் அறிக்கை விட்டிருப்பதால் அவருக்கு ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் இருந்த மதிப்புக் குறைவடைந்துள்ளது. நீர் கொழும்பில் சவப்பெட்டியில் அவரது படத்தை ஒட்டிய பின்பும் மூப்புக் காரணமாகத் தடுமாறும் சூழலும் அவருக்குக் கடுமையான வருத் தம் என ஊடகங்கள் சுற்றி வளைத்துத் தாக்கி வரும் நிலையிலும் சிவப்புச் சால்வை போர்த்த எவரும் (மகிந்த குடும்பத்தவர்கள்) அரசியலில் இருக்கக்கூடாது என்ற பொதுவான போக்கு ஒன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மகிந்தவின் தலைமையை எந்தளவுக்கு மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது கேள்விக் குறியே.



**ரணிலின் ஆசை**

நாட்டில் மிகவும் செல்வாக்குப் பெற்ற கட்சியான

## சத்தமின்றி ...

அமெரிக்கா, பின்லாந்து மற்றும் கனடா நாட்டு ஆராய்ச்சி மையங்களுக்கு தங்கள் நாட்டு அறிவியலாளர்களை முன்னாள் சோவியத் ஒன்றிய ஆராய்ச்சியாளர்களுடன்அனுப்பி வைத்தார்.

இதன் விளைவாக 1980ஆம் ஆண்டுகளில் இருந்து தற்போது வரை உயிரி மருந்து (பயோ-ஃபார்மா) கண்டுபிடிப்பு என்பது கியூபா நாட்டின் தனித்துவ அடையாளமாக இருந்து வருகிறது. ஈரல் அழற்சி (ஹெபடைடிஸ்), இளம்பிள்ளைவாதம் (போலியோ) மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு எதிராக குறைந்த விலை மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சி கியூபாவில் ஏற்பட்டது.


உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாத மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் அமைப்பு காரணமாக பொருளாதாரம் சார்ந்த முடிவுகளை கியூபா நாட்டு அரசினைத் தவிர வேறு யாரும் எடுக்கவோ செயல்படுத்து வதோ இயலாது. இச்சூழலில் தங்கள் நாட்டு மக்களின் அன்றாடத் தேவை களுக்கு உருளைக்கிழங்கினை வழங்க இயலாத கால கட்டத்திலும் பத்தாண்டுகளுக்குள் நாட்டினை மின்மயமாக்குவது, இரண்டரை ஆண்டுகளில் கல்வியறிவின்மையை ஒழிப்பது மற்றும் மருத்துவ பன் னாட்டியம் போன்ற மிகப்பெருந் திட்டங்களை திறமையான முறையில் வடிவமைத்து செயல்படுத்தியது.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் அவர்களின் உயிரி தொழில்நுட்பத் திறனை மேம்படுத்து வதற்கும் உயிர் காக்கும் மருந்து களை குறைந்த விலையில் உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற வகையில் உதவுவதற்கு உருவான தெற்கு-தெற்கு தொழில்நுட்ப மாற்று கொள்கையினை உலகளவில் நடைமுறைப்படுத்த கியூபா மிகப் பெரும் பணியாற்றி வருவதாக உலக சுகாதார மையம் கூறுகிறது. உலகின் தெற்கில் உள்ள வளரும் நாடுகளுக்கிடையே யான அறிவு, வளங்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் குறித்து விவரிக்க வரலாற்று ரீதியாக கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களால் பயன்படுத்தப்படும் பதமே தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு.

அறிவியல் கோட்பாடுகளை கற்பிக்க மற்றும் கற்றுக்கொள்ள கடைப்பிடிக்கப்படும் ஆழமான கல்வி முறை மற்றும் நாட்டின் சமூக நலனுக்கான பொருளாதார அடிப் படையில் சீரமைக்கப் பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடு கள் உலகம் மதிக்கும் ஒரு சிறந்த மருத்துவ உயிரி தொழில்நுட்பத் துறையினை கியூபா உருவாக்க உதவியது.

கியூபா அளவுக்குள்ள நாடான இலங்கையோ கொரோனாவைக் காரணம் காட்டியே இருந்த நிலையிலிருந்து அதளபாதாளத்திற்குள் விழுந்துள்ளது. நாட்டை வழிநடத்துபவர்களின் தூரநோக்கும், சிந்தனையும்தான் அதற்கான காரணங்கள்.

## "கொழும்பட்ட கிரி...



ஐக்கிய தேசியக் கட்சி 2020 தேர்தலில் ஓர் ஆசனத்தைக்கூடப் பெறவில்லை. அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரிய ஆகியோரை மக்கள் ஓரம்கட்டியுள்ள நிலையில் நாடு முழுதும் ஐ.தே.க. பெற்றுக்கொண்ட வாக்குகளை வைத்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மூலம் ஓர் ஆசனம் வழங்கப்பட்டது. அந்த இடத்துக்கு யார் நாடாளுமன்றம் செல்வது என்ற தீர்மானத்தை ஏறத்தாழ ஒரு வருட காலமாக அந்தக் கட்சி உறுப்பினர்களால் எடுக்க முடியாத நிலையில் அந்தப் பதவியில் இருப்பதற்குத் தனது வெட்கத்தையெல்லாம் களைந்துவிட்டு நாடாளுமன்றம் சென்றவர் ரணில். இப்படியான அடிமட்டத் தோல்வியின் பின்பும் ரணில் தலைமை அமைச்சராக நினைப்பது வேடிக்கையானது.

**சஜித்தின் கோமாளிப் பேச்சு**

எப்போதும் ஒரு முஸ்பாத்திக்காரன்போல கதைக்கும் சஜித் பிரேமதாசவின் முகம் இந்தச் சமூகத்தில் எந்தப் பிரச்சினையையும் உள்வாங்கியதற்கான அறிகுறிகளைக் காட்டாது இருக்கிறது. இந்த நிலையில் இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினை, ஏற்றுமதி வர்த்தகம், பொருள் தட்டுப்பாடு, பன்னாட்டுச் சிக்கல்கள், பன்னாட்டு விலையேற்றம் போன்றவற்றை உடனடியாகக் கையாண்டு தீர்க்கும் வல்லமை சஜித்திடம் இல்லை என்பது பொதுவாகத் தெரிந்த விடயம். மலைபோல இருக்கின்ற பிரச்சினைகள் எதையும் கருத்தில் எடுக்காது தான் தலைமை அமைச்சர் ஆனால் எல்லாவற்றையும் நிறைவேற்றுவேன் என்பதும் நிறைவேற்று அரச தலைவர் முறையை ஒழிக்கவேண்டும் என்பதும் (அவரது தந்தை பிரேமதாச அந்த அதிகாரத்தை வைத்து அரசியல் நடத்தியவர். அதை வைத்து 1988-89 காலப் பகுதியில் 60 ஆயிரம் வரையான சிங்கள மக்களை ஜே.வி.பி. என்ற போர்வையில் கொன்று குவித்தார். தற்போது ரம்புக்கனையில் ஒருவர் கொல்லப்பட்டதை வன்மையாக கண்டிக்கிறார்) சிங்கள மக்களைக் கவரப் போவதில்லை.



**செல்வம் அடைக்கல நாதனின் விருப்பம்**

தமிழரிடம் ஆட்சிப் பொறுப்பைக் கையளித்தால் இலங்கை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளை மிகக் குறுகிய காலத்தில் தீர்க்கமுடியும் எனச் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார். 2013இல் கூட்டமைப்பின் கைக்கு எட்டிய வடமாகாண சபையையே நடத்த முடியாது தினமும் சண்டை பிடித்த ஒரு கட்சி எவ்வாறு பெரும்பான்மைச் சிங்களவரை ஆள முடியும். எந்த விடயத்திலும் ஒற்றுமை இல்லாத தமிழ்த் தலைவர்களுக்கு அப்படி ஒரு தகுதி வரப்போவதுமில்லை. சிங்களவர் அந்த அளவுக்குக் கீழானவர்களும் அல்ல.



**விக்கியின் விருப்பு**

தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கு நிலத்தைப் பணம் கொடுத்து வாங்கும் வல்லமையுடன் இருக்கிறார்கள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்தால் தமிழரே தமது தாய் நிலத்தை அபிவிருத்தி செய்து கொள்வதுடன் இலங்கை அரசு எதிர்நோக்கும் பண நெருக்கடியையும் தீர்த்து வைக்க முடியும் என்று சவால் விடுக்கிறார் விக்னேஸ்வரன். வடமாகாண சபை முதலமைச்சராக இருந்தபோது பிரித்தானியா, கனடாவுக்குச் சென்று புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பணத்தை இதுவரை இலங்கைக்குக் கொண்டு வந்திருக்கிறாரா விக்னேஸ்வரன். அந்தப் பணம் அவரது கைக்கு இதுவரை எட்டவுமில்லை. எதையாவது கடந்த காலத்தில் சாதித்தவர்களே உறுதிமொழிகளை மக்களுக்குக் கொடுக்க முடியும். அவ்வாறு யாரும் இதுவரை மக்கள் நம்பும்படியாக உருவாகவில்லை. ராஜபக்சாக்களின் கட்டமைப்பை உடைப்பதற்கு அவர்களைவிட வீரியம் மிக்கவர்கள் யாரும் களமிறங்கியதாகத் தெரியவில்லை. தற்போதுள்ள பிரச்சினை சிங்கள மக்கள் தமது மக்களாட்சி உரிமைக்காகப் போராடி வரும் விடயமாகும். அவர்கள் விரைவில் தமக்கான அரசியல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வார்கள்.



அதன் பின்னர் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பழைய வாழ்க்கையே தொடரும்.

# சைக்கிளுக்குத் திரும்பும் உலகம்!

கொரோனா தீநுண்மி பாதிப்பிலிருந்து உலகம் இன்னும் முழுமையாக மீளவில்லை. அடுத்த அலை எப்போது வருமோ என்கிற பீதி ஒருபுறம் இருக்கவே செய்கிறது. மீண்டும் பழைய வாழ்க்கை எப்போது திரும்பும் என்கிற கேள்விக்கு விடை இல்லை. கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்ளுங்கள் என்கிற குரல்கள் கேட்பதுதான், இப்போது மக்களுக்கு உள்ள ஒரே வாய்ப்பு.

வீட்டைவிட்டு வெளியே வந்தால், முகக்கவசம்; கைகளை அடிக்கடி சோப்பு நீரால் கழுவுதல், சமூக இடைவெளி போன்றவை எழுதப்படாத விதிகளாகிவிட்டன. ஆனால், கொரோனா ஏற்படுத்திய தாக்கத்தால் உடல் நலனைப் பேணுவது, உடற்பயிற்சி செய்து உடலைக் கட்டுக் கோப்பாக வைத்துக்கொள்வது, மூச்சுப் பயிற்சியை செய்து சுவாசத்தைச் சீராக வைத்துக்கொள்வது எனப் பலரும் பல வழிகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள்.

அந்த வகையில் பொதுப் போக்குவரத்துக்கு குட்பை சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள் 'சொகுசுவாசிகள்' என்று பெயரெடுத்த பிரிட்டன்வாசிகள். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தினால், கொரோனா தொற்றிவிடுமோ என்கிற அச்சம்தான் இந்தத் தயக்கத்துக்குக் காரணம். கார் அல்லது பொதுப் போக்குவரத்து மூலம் சுற்றிவந்தவர்கள், தற்போது கிடப்பில் போட்டுவைத்திருந்த இருசக்கர மோட்டார் வாகனம் அல்லது சைக்கிளைத் தூசுத் தட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

கொரோனா வைரஸ், உடல் நலம் சார்ந்தும் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பலமாகப் பேண வேண்டிய அவசியத்தையும் உலகுக்கு எடுத்துரைத்துள்ளது. எனவே, இருசக்கர மோட்டார் வாகனத்தைவிட, சைக்கிளில் செல்வது உடல்நலனுக்கு நல்லது என்பதால், சைக்கிள் பக்கம் தங்களுடைய பார்வையைத் திருப்பியிருக்கிறார்கள் பிரிட்டன்வாசிகள். கடந்த ஓராண்டில் மட்டும் பிரிட்டனில் சைக்கிள் விற்பனை 100 மடங்கு அதிகரித்திருக்கிறதாம். பிரிட்டனில் உள்ள சைக்கிள் கடைகளில் முன்பு வாரத்துக்கு 20-30 சைக்கிள் விற்பனையாவதே பெரிய விஷயம். இப்போது தினமும் 40-50 சைக்கிள்கள் விற்பனையாவதாகச் சொல்கிறார்கள்.

இங்கிலாந்து மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளான ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளிலும் மீண்டும் சைக்கிளுக்குத் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள். பணக்கார நாடுகள் நிறைந்த ஐரோப்பாவில் சைக்கிளைப் பயன்படுத்தவேண்டிய நிலைக்கு லைஃப் ஸ்டைலை மாற்றிவிட்டிருக்கிறது கொரோனா வைரஸ். இந்தியாவிலும்கூட சைக்கிள்களின் விற்பனை 20 சதவீதம் வரை அதிகரித்திருப்பதாகச் சொல்கிறார்கள்.




கொரோனா தாக்கம் ஒருபுறம் காரணம் என்றால், அதிகரித்துவரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வும் இன்னொரு காரணம்.


எது எப்படியோ, கெட்டதிலும் ஒரு நல்லது! ஆனால், இலங்கையில் அப்படியில்லை என்று நிம்மதியடையலாம். எல்லோரையும் சைக்கிள் ஓடவைக்கும் மிகப்பெரும் திட்டத்தை நோக்கி ஆட்சியாளர்களே நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்!

# சிரமப்படுத்தும் சிறுநீர்க் கசிவு

கணேசன்

நம்மை உடல் அளவில் மட்டுமல்லாமல் மனதளவிலும் பாதிக்கும் பிரச்சினைகளுள் சிறுநீர்க் கசிவு முக்கியமானது. இருமும்போதும் தும்மும்போதும்கூட சிறுநீர்க் கசிவு ஏற்படும்போது, பலரும் கடுமையான மன உளைச்சலுக்கு ஆட்படுவதைக் காண்கிறோம். இது பெண்களை மட்டுமே பாதிக்கும் என்றுதான் அநேகரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், இல்லை, இது ஆண்களையும் பாதிக்கும். பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளையும் பாதிக்கும்.

சிறுநீரைக் கழிப்பதில் கட்டுப்பாடு இல்லாத நிலைமையை அல்லது அடக்க முடியாத நிலைமையைச் 'சிறுநீர்க் கசிவு' (URINARY INCONTINENCE) என்கிறோம். இந்தப் பாதிப்பு உள்ள ஒருவர் எங்கே, எப்போது, எந்நேரம் என்று யோசிக்க முடியாமலும் தன்னை அறியாமலும் சிறுநீர் கழித்துவிடுவார்.



**இதற்கு என்ன காரணம்?**

சிறுநீரகத்திலிருந்து சொட்டுச் சொட்டாகப் பிரியும் சிறுநீர், சிறுநீர்க் குழாய் வழியாகச் சிறுநீர்ப்பையை வந்தடையும். பொதுவாக, நம் சிறுநீர்ப்பையில் 400 முதல் 600 மி.லி. வரை சிறுநீரைத் தேக்கிவைக்க முடியும். சிறுநீர்ப்பை சுருங்கி விரியும் தன்மை உடையது. ஆகவே, அதிகபட்சமாக 850 மி.லி. வரை அது தாக்குப்பிடிக்கும். வழக்கத்தில், சிறுநீரானது 450 மில்லியைத் தாண்டியதும், சிறுநீர் கழிக்கும் உணர்வை ஏற்படுத்தும். அப்போது பலரும் சிறுநீர் கழித்துவிடுவார்கள். அல்லது அடக்கிக்கொள்வார்கள். சிலருக்குச் சிறுநீரை அடக்க முடியாது. அவர்களின் கட்டுப்பாட்டையும் மீறி, தானாகவே சிறுநீர் சொட்டடிக்கும்.

**தூண்டும் காரணிகள் என்னென்ன?**

சிறுநீர்ப்பையில் 'ஸ்பிங்க்டர்' (SPHINCTER) எனப்படும் வால்வுகள் இரண்டு உள்ளன. இவை பலவீனம் அடைவது சிறுநீர்க் கசிவுக்கு ஒரு முக்கியக் காரணம். கோட்டைக் கதவுபோல் வால்வுகள் வலுவாக இருக்க வேண்டுமானால், அவற்றைச் சுற்றியுள்ள சிறுநீர்ப்பைத் தசைகளும், இடுப்புக்குழித் தசைகளும் துவளாமல் இருக்கவேண்டும். முதுமை, அதீத அழுத்தம், நோய் போன்ற பலவும் இந்தத் தசைகளைப் பலவீனப்படுத்துகின்றன. இதனால், சிறுநீர்ப்பை வால்வுகள் வலுவிழந்து, விரிசல்விட்ட தொட்டியில் தண்ணீர்க் கசிவு ஏற்படுவதுபோல, சிறுநீர்க் கசிவுக்கு வழிவிடுகிறது.



அடுத்து, சிறுநீர்ப்பைக்குச் செல்லும் நரம்பில் பாதிப்பு ஏற்பட்டால், மூளைக்குச் செல்லும் தகவல் தடைபடும். அதனால் சிறுநீரை அடக்க முடியாமல் போகும். இதற்கு 'நரம்புக்குறை சிறுநீர்ப்பை' (NEUROGENIC BLADDER) என்று பெயர். சிலருக்கு சிறுநீர்ப் பையில் தசைச் சுருக்கம் ஏற்படும். அப்போது சிறுநீர்ப்பை நிரம்பா லேயே சிறுநீர் கசியும். அதற்கு 'அதீத செயலூக்கச் சிறுநீர்ப்பை' (OVERACTIVE BLADDER) என்று பெயர்.

**என்னென்ன வகைகள் உள்ளன?**

சிறுநீர்க் கசிவில் பல வகை உண்டு. முதலாவது 'அழுத்தக் கசிவு' (STRESS INCONTINENCE). அடிவயிற்றில் அழுத்தம் ஏற்பட்டு, சிறுநீர்ப்பை அழுத்தப்பட்டு, சிறுநீர்க்கசிவு ஏற்படுவது இந்த வகை. கனமான பொருட்களைத் தூக்கும்போது, பலமாகத் தும்மும்போது, இருமும்போது, சிரிக்கும்போது சிறுநீர்க் கசிவு ஏற்படுவது இதனால்தான். நீரிழிவு நோயாளிகள் உட்பட ஒரு சிலர் அடிக்கடி சிறுநீரை அடக்குவார்கள். அப்போது சிறுநீர்ப்பை வால்வில் அழுத்தம் ஏற்பட்டு, அது வலுவிழந்து, சிறுநீர்க் கசிவுக்கு வழிவிடும்.

உடற்பருமன், கர்ப்பம், குடல் கட்டிகள், மலச்சிக்கல் என ஏதாவது ஒரு காரணத்தால் சிறுநீர்ப்பையில் அழுத்தம் அதிகரிக்கிறது என்றால், அதனாலும் சிறுநீர்க் கசிவு ஏற்படுகிறது. மிகக் குறைந்த இடைவெளியில் அடிக்கடி குழந்தை பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கும் இரண்டுக்கு மேல் குழந்தை பெற்றுக்கொண்ட பெண்களுக்கும் இடுப்புக்குழித் தசைகள் பலவீனம் அடைந்து சிறுநீர்க் கசிவு ஏற்படுவது அடுத்த வழி.

நாற்பது வயதைக் கடந்த பெண்களுக்கு சில ஹார்மோன்களின் செயல்பாடு குறைவதால் இந்தப் பிரச்சினை உருவாகிறது. பெண்களுக்குக் கருப்பையை அகற்றுதல், ஆண்களுக்கு புராஸ்டேட் நீக்கம் ஆகிய அறுவை சிகிச்சைகளின் பின்விளைவாலும் இது ஏற்படலாம். கடுமையான மன அழுத்தமும் இதற்குக் காரணமாகலாம்.

அடுத்தது, 'அவசர சிறுநீர்க் கசிவு' (URGE INCONTINENCE). இது முதுமையில் ஏற்படும் பிரச்சினை. முக்கியமாக, 'நரம்புக்குறை சிறுநீர்ப்பை' உள்ளவர்களுக்கு இது ஏற்படுகிறது. அடக்க முடியாமலும் மிக அவசரமாகவும் சிறுநீரைக் கழிக்க வேண்டியது வரும். இது இரவில் அடிக்கடி எழுப்பித் தொல்லை தரும். மத்திய நரம்புகளில் பிரச்சினை, பக்கவாதம், சிறுநீர்ப்பையில் கடுமையான

**முதுமை, அதீத அழுத்தம், நோய் போன்ற பலவும் இந்தத் தசைகளைப் பலவீனப்படுத்துகின்றன. இதனால், சிறுநீர்ப்பை வால்வுகள் வலுவிழந்து, விரிசல்விட்ட தொட்டியில் தண்ணீர்க் கசிவு ஏற்படுவதுபோல, சிறுநீர்க் கசிவுக்கு வழிவிடுகிறது**

# 56

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்



சாத்தியப்படாதது போலவே பிறரது எண்ணம் அபிப்பிராயம் கருத்து போற்றுதல் தூற்றுதல் என எல்லாவற்றையும் சாத்தியமானவற்றிற்கும் பொருத்துகிறோம். அதிலிருந்து எம் மீதான அதீத பெருமிதத்தையும் அதிலிருந்து சந்தேகத்தையும் நாமாகவே ஏற்படுத்துகிறோம். அது எம்மிடமிருந்து நிம்மதியை திருப்தியை எல்லாம் களவாடிப்போகிறது. ஆக மொத்தம் எமது சமநிலை குழம்பிப்போகிறது. காரணம் எமது மனமேயன்றி வேறில்லை.

நானே செய்தேன் எனும் விதமான பெருமையானது என்னால் மட்டுமே முடியும் எனும் கற்பிதத்தினுள் என்னையறியாமலேயே இழுத்துச் சென்றுவிடுகிறது. அதனைவிட பிறர் எதற்குமே லாயக்கற்றவர் என்கிற எண்ணத்தையும் உண்டாக்கிவிடுகிறது. இந்நிலையே ஒரு கட்டத்தையடையும்போது என்னைத் தனியனாக்கவும் செய்கிறது. ஒருவன் ஒருபோதுமே பிறனொருவனாக இருந்துவிட முடியாது என்கிற யதார்த்தம் மறைக்கப்பட்டு நான் எல்லாம் வல்லவன் எனும் மிதப்புநிலையும் நான் தனித்துவமானவன் எனும் நிலையும் உருவாகிறது.

நானே சிறந்தவன் எனும் மிதப்புநிலையானது கள-தள யதார்த்தத்தை உணர்ந்துகொள்ளவும் பிறரைச் செவிசாய்க்கவும் தடையாக பெருஞ்சுவரொன்றை எழுப்பிவிடுகிறது. பிறர் என்னைவிட்டொதுங்கவும் ஒதுக்கவும் காரணமாகிவிடுகிறது. ஆக நான் தனியன் ஆகுதல் என்பது நிகழ்ந்தேறிவிடுகிறது. இந்நிலைக்கான அடிப்படைக் காரணிகள் இவ்வாறமைந்திருக்க நாமோ பிறர் எரிச்சல் - பொறாமை கொண்டு ஒதுக்குகின்றனர் என்கிற விதமாகவோ அல்லது கிரகக் கோளாறென்றோ எண்ணத் தொடங்குகிறோம்.

அவ்வாறான எண்ணம் தவறானதென்பதை உணரக்கூட முடியாத நிலையில் எனது கவனத்தைச் சிதற விடுவதை தவிர்க்கமுடியாததாகிறது. கவனம் தவறுதலின் விளைவுகள் தொடர்பாக முன்னர் பேசியிருக்கிறோமல்லவா? செயல்களின் கட்டமைவு சிதைவடையத் தொடங்குகிறது. தோல்வியென்கிற புனைவு எல்லையுள் இழுத்துச்செல்லப்படுகிறோம். வெற்றி என்பதனது விளைவுதான் இது என்பதை ஏற்றுக்கொள்ள முடிகிறதா?

மறுவளமாக தோல்வி எனும் புனைவுத் தளத்துக்குள் இருக்கிறோம் என்பதான எண்ணம் அவ்வாறான நிலைக்கான காரணங்களை ஆராயமுற்படவேண்டும். அவ்வாறுதான் செய்கிறோமா? இல்லை. எப்போதுமே தவறு அல்லது தோல்வி என்கிற குறித்த ஒரு விடயத்துக்கான காரணத்தை பிறரிலிருந்தும் கண்காணாக் கற்பனைகளிலிருந்தும்தானே தேடத் தொடங்குகிறோம் என்பதை உணரமுடிகிறதா? காரணம் எப்போதுமே வெளியில் இல்லை என்பதை முதலில் நம்பவேண்டும்.

இவ்விடத்தில் பிறரது ஒத்துழைப்பு உறுதுணை ஆதரவு போன்றன ஏன் கிடைக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அவ்வாறேன் கிட்டவில்லை? எப்போதாவது தன்னிலை நின்று யோசித்திருக்கிறோமா? தொடக்கத்தில் பேசிய எல்லாம் நானே எல்லாம் என்னால் மட்டுமே என்கிற போக்கானது பிறர் கருத்தை உதவிகளை ஒத்துழைப்புகளை பெற அனுமதிக்காது. அது மட்டுமல்ல அவனது வேலைக்குள் நாமேன்? என்கிற விதமாக பிறரை ஒதுங்கவும் செய்திருக்கலாமல்லவா? பிறரை ஏற்காமை மட்டுமல்ல தவறுகளுக்கான மூலத்தை தம் மீது சுமத்திவிடுவான் என்கிற அச்சம்கூட ஒதுங்கச் செய்திருக்கலாமல்லவா?

இப்போது கூட்டுப்பொறுப்பு என்பது என்ன என்பது குறித்தவொரு பார்வை தேவையாக உள்ளதல்லவா? சாதகம் பாதகம் கிட்டியமை கிட்டாமை வெற்றி தோல்வி போன்ற முரணி நிலைப் பெறுதிகளுக்கான பொறுப்புக்கூறலினது சமநிலை பற்றிய தெளிவு அவசியமாகிறது. பெறுதி எப்படியாகவும் இருக்கலாம் அதற்கான மூளையுழைப்பு உடலுழைப்பு பொரளாதார உறுதுணை போன்றவை தெளிவான புரிதலுக்கும் வெளிப்படுத்துகைக்கும் உட்படுத்தப்படல் அவசியமாகிறது. நாம்தான் அவ்வாறு கவனத்துக்குள் எடுப்பதில்லை என்பதையாவது உணரமுடிகிறதா?

எதனையும் இவ்விதமாகப் பொதுமைப்படுத்தி சமநிலை நின்று ஏற்றுக்கொள்வதை விடுத்து அலைகிறோம். பிறரையும் அலைக்கிறோம். எந்தவொன்றும் புதியதுமல்ல. பழையதுமல்ல. அப்படியாயின் எமது நிலை என்ன? நாம் புதியவர்களா? இல்லை பழையவர்களா? இரண்டும் கெட்டான்களா? சிந்திக்கவேண்டும். சிந்திப்போம்.

---

## சிரமப்படுத்தும் ...

தொற்று, கல், கட்டி இருந்தால் இந்த நிலைமை உண்டாகும்.

மூன்றாவது, 'நிரம்பி வழியும் நீர்க் கசிவு' (OVERFLOW INCONTINENCE). இவர்களுக்கு சிறுநீர் கழித்த பிறகும் இன்னும் சிறுநீரைக் கழிக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கும் அல்லது சிறுநீர் சொட்டடிக்கும் அல்லது முக்கிச் சிறுநீரை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். சிறுநீர்ப்பையில் அல்லது அதன் வெளிப்பாதையில் அடைப்பு இருப்பதுதான் இதற்குக் காரணம்.

ஆண்களுக்கு புராஸ்டேட் வீக்கம் / புற்றுநோய் இருந்தால், பெண்களுக்கு 'சிறுநீர்ப்பை இறக்கம்' (CYSTOCELE) இருந்தால், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குத் தானியங்கி நரம்புகள் பலவீனம் ஆவதால் இந்த வகை சிறுநீர்க் கசிவு ஏற்படுகிறது. சிறுநீர்த் துவாரம் சுருங்குவது, முதுகு மற்றும் மூளைத் தண்டுவடம் தொடர்புடைய நோய்கள், அல்ஸைமர், பார்க்கின்ஸன் நோய் போன்ற காரணங்களாலும் இது ஏற்படலாம். முதுகில் ஏற்படும் விபத்து மற்றும் பிறவிக் கோளாறு காரணமாக சிறுநீர்ப்பைக்கு வரும் நரம்பு பாதிக்கப்பட்டாலும் இந்தத் தொல்லை தொடரும். புகைபிடிப்பதும் மது அருந்துவதும் வைட்டமின் பி12 குறைபாடும் இந்தப் பிரச்சினையை விரைவில் வரவேற்கும்.

**என்ன சிகிச்சை உள்ளது?**

'அழுத்தக் கசிவு' உள்ளவர்கள் உடல் எடையைப் பேண வேண்டும். கனமான பொருட்களைத் தூக்கக் கூடாது. தும்மல் / தொடர் இருமல் இருப்பவர்கள் தொடக்கத்திலேயே அவற்றுக்கான சிகிச்சைகளை முறைப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். மன அழுத்தம் குறைய யோகா, தியானம், நடைப்பயிற்சி உதவும். புராஸ்டேட் வீக்கம் காரணமாக சிறுநீர்க் கசிவு இருப்பவர்கள் அதைத் தொடக்கத்திலேயே கவனித்தால் மருந்துகள் மூலமே சரிப்படுத்த முடியும். தவறினால், அறுவை சிகிச்சைதான் அடுத்த வழி. சிறுநீர்ப்பையில் கல், கட்டி இருந்தாலும் சிறுநீர்த் துவாரம் அடைத்திருந்தாலும் அறுவை சிகிச்சைதான் ஒரே வழி.

'அவசர சிறுநீர்க் கசிவு' இருப்பவர்களுக்கு மருந்துகளோடு குறிப்பிட்ட இடைவெளிகளில் சிறுநீர் கழிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். மூளை நரம்பு தொடர்பான நோய்கள் மற்றும் அல்ஸைமர் நோயுள்ளவர்களுக்கு 'டயப்பர்' பயன்படுத்திக்கொள்ளலாம். சிறுநீர்ப்பையில் 'செயற்கை வால்வு' (TAPE MECHANICAL OCCLUSIVE DEVICE - TMOD) பொருத்தப்படும் நவீன அறுவை சிகிச்சை ஒன்று இப்போது வந்துள்ளது.

ஒவ்வொரு குழந்தைப் பேறுக்குப் பிறகும் இடுப்புக்குழித் தசைகளும் சிறுநீர்ப்பைத் தசைகளும் துவண்டுவிடாமல் இருக்க, பெண்களுக்கென 'கேஜெல் பயிற்சிகள்' (KEGEL EXERCISES) உள்ளன. அவற்றைத் தொடர்ந்து செய்யவேண்டும். 'வஜைனல் பெசரி' (VAGINAL PESSARY) என்னும் சிறு வளையத்தைப் பெண்களின் சிறுநீர்த் துவாரத்தைச் சுற்றி வெளிப்பக்கத்தில் பொருத்தும் சிகிச்சையும் உள்ளது. இது சிறுநீர்ப்பை வால்வைத் தாங்கிக்கொண்டு, அது சிறுநீரை ஒழுக விடாமல் பார்த்துக்கொள்கிறது. தவிர, கொலாஜென் ஊசி மருந்துகளும், ஈஸ்ட்ரோஜன் சிகிச்சையும் சிலருக்குப் பயன் தருகின்றன. இவற்றுக்கெல்லாம் சிறுநீர்க் கசிவு சரியாகாதவர்களுக்கு அறுவை சிகிச்சைதான் கைகொடுக்கும். அதற்கு 'யூரோ கைனக்காலஜிஸ்ட்' என்னும் மகளிர் சிறப்பு மருத்துவரிடம் ஆலோசித்துக்கொள்ள வேண்டும்.

அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியாதவர்களுக்கும், முதுமை மற்றும் நாட்பட்ட நோய்கள் காரணமாக மாதக் கணக்கில் படுக்கையில் கிடப்போருக்கும், மற்ற சிகிச்சைமுறைகளில் சிறுநீர்க் கசிவு சரியாகாதவர்களுக்கும் 'கெதீட்டர்' என்னும் ரப்பர் குழாயைச் சிறுநீர்ப்பைக்குள் நுழைத்து விடுவதுதான் இறுதி வழி. பொதுவாகவே, இந்தப் பிரச்சினை உள்ளவர்கள் புகை, மது, அதிக அளவில் காபி குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். நிரிழிவு நோய் இருந்தால் அதைக் கட்டுப்படுத்தவேண்டும்.

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

16



## காய்ச்சலின்போது நடுங்குவது ஏன்...?

நாம் அனைவரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் முகம்கொடுத்தாலும் அது ஏன், அப்படி என்று தேடிப்பார்க்காமல் கடந்து செல்லும் விடயங்களில் முக்கியமானது இது. அதாவது காய்ச்சல் வரும்போது நமக்கு நடுக்கம் (குளிர்) உண்டாவது ஏன் என்று பலருக்கும் தெரிவதில்லை. காய்ச்சலடிக்கிறது என்று நாம் சென்று மருத்துவரிடம் சொன்னால் அவர் நமது உடலின் வெப்பத்தை அளவிட்டு அது அதிகரித்திருக்கிறது என்று அளவையும் சொல்வார். ஆனால் நாமோ குளிரால் நடுங்கிக் கொண்டிருப்போம். அதெப்படி நமக்குக் குளிர்கிறது மருத்துவரோ உடல் வெப்பம் அதிகரித்திருக்கிறது என்கிறார் என்று நாம் சிந்திப்பதில்லை (அது ஏன் அப்படி என்று தெரிந்திருப்பவர்கள் தவிர). சிந்தித்தாலும் கேட்பதில்லை. பின்னரும் அதுபற்றித் தேடிப் பார்ப்பதில்லை.

காய்ச்சல் என்பது நமது உடலின் வெப்பநிலை வழமைக்கு மாறாக அதிகரித்துக் காணப்படும் நோய் அறிகுறி. நோய் எதிர்ப்பு சக்தி தொழிற்படத் தொடங்கி நோய்க் காரணிக்கு எதிராகச் செயற்படும்போது உடலின் வெப்பநிலை வழமையிலிருந்து சடுதியாக அதிகரிக்கிறது. உடல் வெப்பநிலை அதிகரித்தாலும் நம்மைச் சுற்றியுள்ள சூழலில் நிலவும் வெப்பநிலை அதே அளவிலேயே இருக்கிறது. சூழல் வெப்பநிலையிலிருந்து உடல்வெப்பநிலை பெருமளவுக்கு மாறுபடும்போது நமக்குச் சூழல் குளிர்கிறது. அதனாலேயே உடல் சுட்டுக் கொண்டிருக்கச் சூழல் குளிர்வதாக உணர்கிறோம். தவிர அப்போது மற்றைய சாதாரண உடல் நிலையுள்ளவர்களுக்குக் குளிர் ஏற்படாது.

காய்ச்சல் காரணமாக உடல் வெப்பநிலை அதிகரிக்கும்போது அதை அளவிட்டு மருந்து தருகிறார் மருத்துவர். மருந்துக்குக் கட்டுப்படாவிடில் ஈரமான துணியால் உடலைத் துடைக்குமாறும், அதிக நீர் அருந்துமாறும் ஆலோசனை தருவார்கள். மருந்தை அருந்தியதும் உடற் சூடு தணியும்போது உடலானது சூழல் வெப்பத்தை உணரத்தொடங்கும். அப்போது இலோசாக வியர்க்கவும் செய்யும்.

# புலிகள் செய்வதுபோல ஏன் படையினரால் செய்ய முடியாது?

**கமலநாதன்**

மேஜர் ஸ்ரீபதி குணசேகர. இவர் 1986இல் படைப்பிரிவில் சேர்ந்தார். இந்தியா, அமெரிக்காவில் கொமாண்டோ சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றவர். ஆழ ஊடுருவும் படைக் கட்டமைப்பை தானே சிந்தித்து உருவாக்கியவர். ஆழ ஊடுருவும் படையணியின் சிற்பி என வர்ணிக்கப்படுபவர். புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய நபராகப் போற்றப்படுகிறார். ஆழ ஊடுருவும் படைப்பிரிவின் பல்வேறு நுட்பங்களைக் கண்டுபிடித்தவர். வெனச யூரியூப் தளத்தில் தனது அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்தார்.

1986இல் படைப்பிரிவில் சேரும் எண்ணம் வருவதற்கு முன்னர் நான் ஒரு கொமாண்டோ வீரனாக வர ஆசைப்பட்டேன். படையில் சேர்ந்து ஒரு வருட காலத்தில் கொமாண்டோ வாக மாறினேன். 1987இல் இந்தியப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் மிக இரகசியமாக கோமரங் கடவள, கந்தளாய்ப் பகுதிகளில் சிங்களக் கிராமங்களைப் பாதுகாக்கும் பணியில் மக்களுடன் இணைந்து செயற்பட்டேன்.

1990இல் சிறப்புக் கொமாண்டோப் பயிற்சிக்காக இந்தியா சென்றேன். நான்கரை மாதங்கள் இந்தப் பயிற்சி நடந்தது.

மீண்டும் இலங்கைக்குத் திரும்பியபோது இரண்டாம் ஈழப்போர் தொடங்கி ஒரு நாள் கடந்திருந்தது. நான் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங்கியபோது மக்களின் முகங்கள் இறுகிப்போயிருப்பதைக் கண்டேன். போர்ப் பயம் அனைவர் மத்தியிலும் காணப்பட்டது.

எனது படைப்பிரிவான சாலிப் பிரிவுக்கும் ஏனைய கொமாண்டோ அணியினருக்கும் பொறுப்பாக கேணல் அஷார் இருந்தார். கட்டை பறிச்சான் பாலத்துக்கு அருகில் பெரிய மோதல் ஒன்று நடந்தது. இந்தத் தாக்குதலில் கொமாண்டோப் படைப்பிரிவுக்கு அதிக இழப்பு ஏற்பட்டது. இந்தச் சண்டை 1991இல் நடந்தது. எனது பொறுப்பிலிருந்த படைக்கு பீலிஸ் ரட்ணாயக்க பொறுப்பாகச் சென்றார். இந்த மூதூர் - கட்டை பறிச்சான் தாக்குதலில் கேணல் அஷார், பீலிஸ் ரட்ணாயக்க, நிலந்த யாப்பா, அணில் ரட்ணாயக்க, மகிந்த ராஜபக்ச போன்ற முக்கிய கொமாண்டோத் தளபதிகள் புலிகளால் கொல்லப்பட்டனர். கொமாண்டோப் படைப்பிரிவில் அல்பா, கிராவ், டெல்ரா, சாலி ஆகிய நான்குமே நிலைகுலைந்து போயிருந்தன.

**கொமாண்டோக்களுக்கான சிறப்புப் பயிற்சி**

படையினர் திருப்பித் தாக்கினால் ஓடும் நிலையிலிருந்த புலிகள் 1991இல் திருப்பித் தாக்கும் பலத்தைப் பெற்றிருப்பதை கட்டை பறிச்சான் தாக்குதல் மூலம் அறிய முடிந்தது. பிரிகேடியர் ஞானக பெரேராவைச் சந்தித்துக் கொமாண்டோப் படைப்பிரிவின் எதிர்காலம் பற்றிப் பேசினேன். கொமாண்டோப் பிரிவினர் அதிகம் பயந்த மனநிலையில் இருப்பதால் அவர்களின் மனநிலையைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று அவருக்கு உணர்த்தினேன். அப்போது நான் ரீம் கொமாண்டராக இருந்தேன். எனக்குப் பொறுப்பாக மேஜர் வெலிக்கள இருந்தார்.

கல்லாறு முகாமில் கொமாண்டோக்களுக்கான சிறப்புப் பயிற்சி ஒன்றை வழங்குவதற்கு எனக்கு அனுமதி தரப்பட்டது. கொமாண்டோப் படைப்பிரிவின் இளைஞர்களுடன் மிகவும் நெருக்கமான புரிந்துணர்வான கலந்துரையாடலை மேற்கொண்டு அவர்கள் கூறும் ஆலோசனைகளையும் கவனத்தில் எடுத்து அந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தேன். அவர்களுக்குப் போராடுவதன் அவசியம் பற்றியும் பின்வாங்கக்கூடாது அதற்கான புதிய வழிவகைகளைத் தேட வேண்டும் என்றேன்.

புலிப் பயங்கரவாதிகளை ஒடுக்கவேண்டும் என்றால் நாங்களும் அவர்களைப்போலவே செயற்படவேண்டும். கெரில்லாப் போர் முறைக்கு நாங்களும் தயாராக வேண்டும் என்ற யதார்த்தத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். இதன் பின்னர் 4 பேர், 8 பேர் கொண்ட சிறிய குழுக்களாகச் செயற்படும் முறையை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினேன். அந்த அணியில் இருப்பவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**ஆள ஊடுருவுதல்**

இது மிகவும் ஆபத்தானது. புலிகள் படையினரின் பகுதிக்குள் சிறு குழுக்களாக ஊடுருவுவதுபோல புலிகளின் பகுதிக்குள் படையினர் ஊடுருவிச் செல்வது சிரமம். காட்டுக்குள் செல்லும்போது பயங்கரவாதிகளைக் கண்டுவிட்டால் காட்டு விலங்குகள் குருவிகளின் சத்தத்தை ஏற்படுத்தி ஏனையவர்களைத் தயார் நிலைக்குக் கொண்டுவந்தோம். அதே வேளை புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிப் புலிகளின் நடமாட்டங்களை அவதானித்தபோது காலை வேளையில் ஆடு, மாடுகளுடன் ஊரவர்கள் வருவார்கள். சிலர் காலைக் கடன் கழிப்பது போல வீதியோரமாக் காட்டுக்குள் இறங்கி குந்தியிருந்து காட்டிலுள்ள நடமாட்டங்களை அவதானிப்பார்கள். பின்னர் வேறொரு இடத்தில்போய் குந்தியிருந்து அவதானிப்பார்கள். இவற்றையெல்லாம் வேவு பார்த்துத் தான் அறிய முடிந்தது.

**கேணல் ஹந்தபங்கொட**



**புலிகள் படையினரின் பகுதிக்குள் சிறு குழுக்களாக ஊடுருவுவதுபோல புலிகளின் பகுதிக்குள் படையினர் ஊடுருவிச் செல்வது சிரமம்.**

எமது படையணி மன்னார் - கட்டுக் கரைக் குளத்துக்கு அருகில் முகாமிட்டிருந்த போது கேணல் ஹந்தபங்கொட என்னைச் சந்திக்குமாறு அழைத்தார். அவர் பொது வாகவே எல்லோரையும் ஏசுவார். அவருக்கு எல்லோரும் பயம். என்னையும் பேசத்தான் கூப்பிடுகிறார் என்று நினைத்துச் சென்றேன். தான் இருந்த கதிரைக்கு எதிரில் என்னை இருக்க அனுமதித்தார். "ஆழ ஊடுருவிப் புலிகளின் பகுதிக்குள் போகும்போது தீடீரெனப் புலிகள் மறைந்திருந்து தாக்கினால் என்ன செய்வீர்கள்?" என்றார். இந்தக் கேள்விக்கு ஒரு வரியில் பதில்கூற முடியாது என்று எனக்குத் தெரிந்திருந்தது.

நான் மிகவும் ஆறுதலாக 4 பேர் கொண்ட குழு, 8 பேர் கொண்ட குழு பற்றி நிதானமான அவருக்கு விளக்கினேன். அவர் மிகவும் சிரத்தையுடன் அதைச் செவிமடுத் தார். எனது திட்டம் அவருக்குத் திருப்தி யையும் நம்பிக்கையையும் கொடுத்திருப்பது புரிந்தது. அவர் மிகச் சிறந்த பயிற்சியாளர் என்பதால் எனது செயற்பாட்டுக்கு 95 புள்ளிகள் வழங்க முடியும் என்றார். அந்தப் பதிலை அவரிடமிருந்து நான் எதிர்பார்த் திருக்கவில்லை. அவரது பதில் திருப்தியாக இருந்தது. (தொடரும்)

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781